# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஜனவரி 2011 ஜீவியம் 16 மலர் 9

இம்மாத மலரில். . . .

பொருளடக்கம்


பக்கம்

சாவித்ரி ........ 2

இம்மாதச் செய்தி ........ 4

கர்மயோகி அவர்களின் P&P Commentaryஇல் காணப்படும் ஆன்மீக வார்த்தைகளுக்கான விளக்கங்கள் ........ 5

லைப் டிவைன் ........ 10

தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் ........ 25

அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு ........ 26

அஜெண்டா ........ 37

பூரணயோகம் - முதல் வாயில்கள் ........ 39

அன்னையின் முத்திரை ........ 42

லைப் டிவைன்-கருத்து ........ 54

அன்பர் கடிதம் ........ 57

யோக வாழ்க்கை விளக்கம் VI ........ 58


❀ ❀ ❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

**செயலுக்குக் காலம் தேவை. ஆன்மா செயல்பட்டால் அது தேவையில்லை.**

**இடையறாத சூட்சும தரிசன-மில்லாமல் இடையறாத நினைவில்லை.**

**நல்லவரை அன்னை நாடி வருகிறார். மேலும் தன்னை நாடி வருபவரையும் அன்னை நல்லவராக்குகிறார்.**

**கல்வி முடியக்கூடியதில்லை. மனிதனைக் கற்பகத்தரு-வாக்கக் கூடியது கல்வி.**

## P.121 The protean images of the World-Force

### உலகின் சக்தி பெற்ற உந்தும் உருவங்கள்

☆ வாழும் திறன் பெற்று, சாதிக்கும் உறுதி பெற்று
☆ ஆழ்ந்த கடலின் அதிதீவிரமான சாந்தி.
☆ ஆத்ம சிகரத்தை வாழ்வில் தலைகீழ் கவிழ்த்து,
☆ ஏகனின் எண்ணற்ற உரிமையைச் செலுத்தி
☆ தான்தோன்றியான கனவுலக அச்சில் வார்த்து,
☆ அவன் விவேக உத்தரவு இலக்கற்ற அவள் போக்கை நிர்ணயித்தது,
☆ ஆடாத அஸ்திவாரத்தில் அவன் நடனத்தை நடத்தி,
☆ அசைவற்ற அழிவற்ற கடந்த காலம்
☆ அவள் சிருஷ்டியின் அற்புதம் சட்டமாக வடிக்கப்பட்டது.
☆ சூன்யம் இழந்த பார்வையின் தெம்பிலிருந்து
☆ நிலையான பிரபஞ்சத்தின் காட்சிகளை எழுதி,
☆ அவள் எண்ணம் நிர்ணயித்த போக்கு, படலம்
☆ ஞான ஒளியின் மின்னல் அவள் பார்வையில் பட்டது.
☆ புதிரான சத்தியம் ஜீவியமாக எட்டிப் பார்த்தது
☆ தெரியாத உணர்வை வழி நடத்திச் செல்லும் அவள் சக்தி,
☆ கொந்தளிக்கும் கடல்கள் அவளால் கொட்டமிழந்தன.
☆ ஆளும் உத்தரவை ஏற்கும் வாழ்வு.
☆ ஜோதிமயமான ஆழ்ந்த அசைவற்றதை அசைக்கும் அவள் உத்தரவு.
☆ சோதிக்கும் மனத்தின் பயங்கரமான பாங்கு



☆ இருண்ட வாய்ப்பினூடே முந்திக்கொண்டு சென்றது;
☆ தன்னையறியாத உலகம் தானே பெறும் உருவத்தினூடே
☆ மனம் பெற்ற அறியாமை ஏற்கும் சத்திய யாத்திரை
☆ இருண்ட காரிருள் எல்லாமறிந்த ஜோதியாகுமாறு,
☆ மாறிய உணர்வின் உருவம் தெய்வீக ஞானமாயிற்று,
☆ அழியாத பிழையற்ற திருஷ்டியைப் பெற்ற எண்ணக் கூடுகள்
☆ இயற்கையெனும் பிரகிருதி எட்டிப்பிடிக்கும் இறைவனின் ஐக்கியம்.
☆ உலகத்தின் தலைவன் உவந்து அவள் அடிமையாகி
☆ கற்பனைக்கோட்டையின் நிர்மாண விற்பனன்:
☆ பிரபஞ்ச சக்திகளை அவள் தொகுத்து வகுத்துவிட்டாள்;
☆ அளவைக் கடந்ததை அளவுக்குட்படுத்தும் அவள் சட்டம்.
☆ அவள் ஆணையை ஏற்க நித்தியம் தன்னைக் கட்டுப்படுத்தியது;
☆ அவள் அறியாமையின் ஆணையை ஏற்ற அவன் படும்பாடு,
☆ மரணமெனும் அவள் ஆடையில் மறைந்து
☆ தேவதையின் கனவு நனவு எனும் உலகம்
☆ கண்ணுக்கெட்டாத சிகரங்கள் கருத்திலழிந்தன:

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

தெய்வ நியாயத்தை ஒரு செயலில் கண்டபின், அதிலுள்ள தவற்றைப் புறக்கணித்து, அதை ஆதரிப்பது பாரபட்சமாகாது.

*ஆண்டவனுக்கான ஆதரவு அருள்.*

## இம்மாதச் செய்தி

**சமர்ப்பணம் பலிப்பது,**

**சர்வமும் வெற்றியாவது.**



# கர்மயோகி அவர்களின் P&P Commentaryயில் காணப்படும் ஆன்மீக வார்த்தைகளுக்கான விளக்கங்கள்

N. அசோகன்

1. **சுபாவம்:** சுபாவம் என்றால் சொந்த பாவம் என்று பெயர். அதாவது பரிசுத்தமான ஆன்மாவின் இயற்கையை இது குறிக்கிறது. சுபாவம் என்பது ஆன்மாவினுடைய இயற்கைத் தன்மையைக் குறிப்பிடுகிறது என்று நாம் எடுத்துக்கொள்ளலாம்.

2. **ஸ்வரூபம்:** உண்மையான வடிவம் அல்லது சொந்த வடிவம்.

3. **விழிப்பற்ற நிலை:** விழிப்புணர்வு இல்லாத ஜடநிலையை இது குறிக்கிறது.

4. **விழிப்புணர்வைத் தாண்டிய நிலை:** (Superconscience) நம்முடைய விழிப்புணர்வைத் தாண்டிய நிலையை இது குறிக்கிறது. உதாரணமாக சத்தியஜீவியம் நம்மால் அறிய முடியாத நிலையில் நமக்கு மேலே உள்ளது. ஆகவே சத்தியஜீவியத்தை விழிப்புணர்வைத் தாண்டிய நிலை என்று வர்ணிக்கலாம். மேலும் ஜீவியம் சத்திற்குள் திரும்பி மறையும் பொழுது சத்திற்கும் ஜீவியத்திற்கும் இடைப்பட்ட ஒரு நிலை ஒன்று எழுகிறது. அந்த இடைப்பட்ட நிலையை விழிப்புணர்வைத் தாண்டிய நிலை என்றும் சொல்லலாம்.

5. **பிரம்மன்:** படைப்பிற்குப்பின் இருக்கும் முழு முதலை இது குறிக்கிறது. எல்லா குணங்களையும், வடிவங்களையும் தாண்டி இது இருப்பதால் இதை நாம் வார்த்தையால் வர்ணிக்கவும் முடியாது.

6. **ஈஸ்வரன்:** படைப்பின் அதிபதியாக சத் விளங்கும் பொழுது அது ஈஸ்வரன் என்று அழைக்கப்படுகிறது.

7. **புருஷன்:** பிரகிருதியின் செயல்பாடுகளுக்கு ஆதாரமாகவும், அதே சமயத்தில் சாட்சியாகவும் சத் செயல்படும்பொழுது புருஷன் என்று அழைக்கப்படுகிறது.

8. **இணைப்பு:** பல்வேறு நிலைகள் ஒன்றாக ஓரிடத்தில் சந்திக்கும் பொழுது அப்படிப்பட்ட இடம் இணைப்பு எனப்படும்.

9. **கடந்தது:** தனிப்பட்ட படைப்பு, மற்றும் பிரபஞ்சமயமான படைப்பு என்று இந்த இரண்டு நிலைகளையும் தாண்டி படைப்பிற்கு வெளியே இருக்கும் பரம்பொருளைக் கடந்தது குறிக்கும்.

10. **சத்தியஜீவியம்:** ஸ்ரீ அரவிந்தரின் கருத்துப்படி சச்சிதானந்தம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும்பொழுது சத் உண்மை-யாகவும், சித் ஜீவியமாகவும், ஆனந்தம் வரம்பற்ற நிலையாகவும் மாறுகிறது. அப்பட்சத்தில் சச்சிதானந்தத்தின் வெளி வடிவம் சத்தியஜீவியமாக மாறுகிறது.

11. **புருஷா & பிரகிருதி:** சத் சாட்சியாகவும், சித் இயங்கும் சக்தியாகவும் தோற்றம் அளிக்கும் பொழுது அது புருஷா, பிரகிருதி என்று அழைக்கப்படுகிறது.

12. **இடைப்பட்ட ஜீவிய நிலை:** இரண்டு ஜீவிய நிலைகளுக்கு இடைப்பட்ட நிலையை இப்படிச் சொல்கிறோம். உதாரணமாக physical ஜீவியத்திற்கும் உணர்வு நிலைக்கும் இடைப்பட்ட நிலையை இவ்வாறு சொல்வதுண்டு.

13. **சுற்றுப்புற ஜீவிய நிலை:** நம்மைச் சுற்றி இருக்கின்றதும் எல்லாவற்றையும் சூழ்ந்து கொண்டிருக்கின்றதுமான ஜீவியத்தைச் சுற்றுப்புற ஜீவிய நிலை என்கிறோம்.

14. **உள்மனது:** நம்முடைய மேல் மனத்திற்குக் கீழே உள்ளிருக்கும் ஆழ்ந்த மனநிலையை இது குறிக்கிறது.

15. **ஆழ்மனது:** நம்மால் உணர முடியாத ஆழத்தில் உள்ள மனநிலையை ஆழ்மனது என்கிறோம். இந்த ஆழ்மனதில் மேலே குறிப்பிட்டுள்ள உள்மனது மற்றும் அடிமனது மற்றும் சைத்திய புருஷன் மூன்றும் உறைகின்றன.



16. **சைத்தியபுருஷன்:** பரிணாம வளர்ச்சி இல்லாத நம்முடைய ஜீவாத்மாவினுடைய பரிணாம வளர்ச்சி பெற்ற பிரதிநிதிதான் சைத்தியபுருஷன்.

17. **சத்தியஜீவிய மயம்:** சத்தியஜீவியம் சம்பந்தப்பட்ட நிலை சத்தியஜீவியமான நிலை. இந்நிலை எப்பொழுதுமே ஒற்றுமை உணர்வோடு உண்மை நிரம்பியதாக இருக்கும்.

18. **சச்சிதானந்தம்:** பரப்பிரம்மம் சத்தாகவும், சித்தாகவும், ஆனந்தமாகவும் படைப்பின் முதல் வெளிப்பாடாகத் தோன்றும் பொழுது இதை சச்சிதானந்தம் என்கிறோம்.

19. **சத்தியஜீவிய மௌனம்:** மௌனம் பல நிலைகளில் இருக்கிறது. Physical நிலையிலிருந்து சத்தியஜீவிய நிலை வரையிலும் மௌனம் பரவி உள்ளது. நம் சிந்தனை ஓடாமல் இருந்தால் நம் அறிவு மௌனமாகிவிட்டதாக உணர்கிறோம். ஆனால் சத்திய ஜீவிய நிலையில் உள்ள மௌனம் அறிவு நிரம்பியதாக இருக்கிறது.

20. **சத்தியஜீவிய அன்பு:** சத்தியஜீவிய அன்பு ஆன்மீகமயமான அன்பாகும். இந்த அன்பு கொடுப்பவருக்கும், மற்றும் பெறுபவருக்கும் இடையே ஒரு ஒற்றுமையை உண்டு பண்ணக் கூடியது.

21. **சத்தியஜீவிய அறிவு:** நம்முடைய அறிவு சத்தியஜீவியத்தால் தொடப்படும் பொழுது அது பகுத்தறியும் தன்மையை இழந்து ஐக்கியத்தால் உணரும் தன்மையைப் பெறுகிறது. இத்தகைய அறிவுநிலை தவறு இல்லாததும் மற்றும் வரம்பற்றதும் ஆகும்.

22. **சத்தியஜீவிய புலனறிவு:** ஒளியை உணரும் புலனறிவாக நமக்குக் கண்கள் செயல்படுவதைப் போல சத்தியஜீவியத்தை உணரக் கூடிய புலனுக்கு நாம் சத்தியஜீவியப் புலன் என்று பெயரிடுகிறோம்.

23. **சத்தியஜீவிய காலம்:** சத்தியஜீவிய நிலையில் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று பிரியாமல் ஒரே நிகழ்காலமாகத் தோற்றமளிப்பதைச் சத்தியஜீவிய காலம் என்கிறோம்.

24. **முக்கால உணர்வு:** கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்று காலங்களையும் உணரக்கூடிய திறனை முக்கால உணர்வு என்கிறோம்.

25. **மோட்சம்:** பிறப்பு, இறப்பிலிருந்து விடுபட்டு ஸ்வர்க்கத்தில் உறைகின்ற விடுதலை பெற்ற நிலையை மோட்சம் என்கிறோம்.

26. **ஜீவாத்மா:** இது பரம்பொருளினுடைய ஒரு பாகமாகும். தனி மனிதனுடைய ஆன்மாவாக இது பிறப்பெடுத்து எண்ணற்ற மறுபிறப்புகளின் மூலம் தன்னுடைய ஆதியான பரம்பொருளை மீண்டும் அடைய முயற்சி செய்கிறது.

27. **பரமாத்மா:** எல்லாவற்றிற்கும் மூலமாகவும், ஆதியாகவும் இருப்பதும், ஜீவாத்மா சென்றடைய விரும்பும் இலக்காக இருப்பதும் இந்த பரமாத்மாதான்.

28. **யுகம்:** யுகம் என்பது ஒரு நெடுங்கால வரையறையைக் குறிக்கிறது. நூறாயிரம் வருடங்களை நாம் ஒரு யுகம் என்று கூறலாம்.

29. **அடிமனதில் உள்ள ஆனந்தம்:** நம்முடைய விழிப்புணர்வுக்குத் தெரியாமல் அடிமனதில் நாம் அனுபவிக்கும் ஆனந்தத்தை இது குறிக்கிறது.

30. **பிரம்ம ஜீவியம்:** எல்லாமே ஒன்று என்று உணரக்கூடிய பரம்பொருளின் ஜீவிய நிலையை இது காட்டுகிறது.

31. **எனர்ஜி ஓட்டங்கள்:** சக்தி அலைகள் பாய்வதை நாம் எனர்ஜி ஓட்டம் என்கிறோம்.

32. **கடந்த நிலை:** உலகத்தைக் கடந்து உறைகின்ற பரம்பொருளின் ஜீவிய நிலைக்குக் கடந்த நிலை என்று பெயர்.

33. **மனோமயபுருஷன்:** அறிவில் உறைகின்ற ஆன்மாவிற்கு மனோமயபுருஷன் என்று பெயர். மனிதனுடைய உண்மையான அறிவு நிலை இதுதான். நம்முடைய சாதாரண மேல்மட்டத்திலுள்ள அறிவு நிலையைவிட இது நிரந்தரமானது.

34. **பிராணமயபுருஷன்:** உணர்வில் உறைகின்ற ஆன்மாவிற்கு பிராணமயபுருஷன் என்று பெயர்.



35. **அன்னமயபுருஷன்:** உடம்பில் உறைகின்ற ஆன்மாவிற்கு அன்னமயபுருஷன் என்று பெயர். மனிதனுடைய உண்மையான physical ஜீவன் இந்த அன்னமயபுருஷன்.

36. **தனித்தன்மை:** சம்பிரதாயத்துக்குக் கட்டுப்படாமல் சொந்தமாகச் செயல்படக்கூடிய திறனைத் தனித்தன்மை என்கிறோம்.

37. **நிஷ்காம்ய கர்மம்:** பற்றுதல் இல்லாமல் செயல்படுகின்ற மனநிலையை இது காட்டுகிறது.

38. **சத்தியஜீவியபுருஷன்:** ஆன்மாவைச் சத்தியஜீவிய நிலையில் பார்க்கும்பொழுது சத்தியஜீவியபுருஷனாகத் தெரியும்.

39. **மேல்மனது:** சத்தியஜீவியத்திற்குக் கீழேயும் அதே சமயத்தில் intuition என்று சொல்லப்படுகின்ற உள்ளுணர்வு நிலைக்கும் இடைப்பட்ட மனநிலையை மேல்மனது (overmind) என்று பகவான் சொல்கிறார். இந்நிலையில் அறியாமை இன்னும் இருக்கிறது. ஒற்றுமை உணர்வும் முழுமையாகாமல் உள்ளது. பரமசிவன், திருமால், கிருஷ்ணபகவான் போன்ற பெருங் கடவுள்கள் இந்த நிலையில்தான் இருக்கிறார்கள்.

40. **குணம்:** சத்வகுணம் ஒளி, நன்மை, அமைதி, சமநிலை ஆகியவற்றால் நிரம்பியது. மனிதனிடத்தில் உள்ள மிகச்சிறந்த குணம் இதுதான். ரஜோகுணம் இயக்கமும், உற்சாகமும் நிரம்பியது. தமோகுணம் இருள் மற்றும் அசைவின்மையால் நிரம்பியது.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மிக உயர்ந்த பண்பு செயலால் நிறைவு பெறும் பொழுது முழுமை ஏற்படும்.

***பண்பு செயலில் நிறைவு பெறும்.***

# லைப் டிவைன்

கர்மயோகி

## 20. மரணம், ஆசை, இயலாமை

**பக்கம் 188, பாரா 1**: ஜடத்தில் உயிருள்ளது. அது வாழ்வாக வெளிப்படும். ஜடத்தின் நோக்கில் அது வாழ்வாகும். பூமியின் பரிணாம வாழ்வு நமக்குரியது. சென்ற அத்தியாயத்தில் அம்முடிவுக்கு வந்தோம். தோற்றம் எதுவானாலும், உள்ள நிலையில் அது எப்படித் தோன்றினாலும், செயல்பட்டாலும், ஒரு விஷயம் தெளிவு. பொதுவான சட்டங்கள் எங்கும் ஒன்றே. வாழ்வு பிரபஞ்ச சக்தி. ரூபங்களை உருவாக்குவது அதன் வேலை. இந்த ரூபங்களைச் சிருஷ்டித்து, சக்தியளித்து, காப்பாற்றி, தேவையானபொழுது மாற்றுவது அதன் கடமை. பரிமாறுவதாலும் கொடுத்து வாங்குவதாலும் இது சாத்தியம். தெளிவான சக்தி பரிமாறுவதால் இது நடக்கிறது. இது வெளிப்படையாகவும் இரகஸ்யமாகவும் நடக்கிறது. அடிப்படை உண்மை மாறுவதில்லை. நாம் ஜட உலகில் வாழ்கிறோம். இதில் வாழ்வினுள் மனம் உள்ளது. மனம் மறைந்துள்ளது. மனத்துள் சத்தியஜீவியம் மறைந்தது போன்றது. இவ்வாழ்வில் ஆழத்தில் மனம் புதைந்துள்ளது. அதுவும் ஜடத்துள் புதைந்துள்ளது. எனவே ஜடம் அடிப்படை. பார்வைக்கு அதுவே ஆரம்பம். உபநிஷதம் ஜடத்தை பிரித்திவி எனக் கூறுகிறது. இது பூமியின் தத்துவம், அடிப்படை. ஜட உலகம் அணுவிலிருந்து ஆரம்பமாகிறது. அணு சக்தியால்



செறிந்துள்ளது. ஆழ்மன ஆசை, உறுதி, அறிவு உருவம் பெறாமல் ஜடத்தை ஊடுருவி நிற்கிறது. ஜடத்திலிருந்து வாழ்வு எழுவதாகத் தோன்றும். அதனுள் புதைந்துள்ள மனத்திற்கு வாழ்வு விடுதலை-யளிக்கிறது. ஜீவனுள்ள உடல் மூலம் அதைச் செய்கிறது. சத்தியஜீவியம் மனத்துள் மறைந்துள்ளது. மனமும் அந்த சத்திய ஜீவியத்தை விடுதலை செய்ய வேண்டும். மனத்தின் தொழிற்பாட்டில் சத்தியஜீவியம் மறைந்துள்ளது. வேறு வகையான உலகை நாம் கற்பனை செய்யலாம். அவ்வுலகில் ஆரம்பத்தில் மனத்துள் சத்திய ஜீவியமிருக்காது. மனம் அதன் சக்தியைத் தெளிவாகப் பயன்படுத்தும். இவ்வழி புதுப்பொருள் சிருஷ்டிக்கப்படுகிறது. ஆரம்பத்திலேயே ஆழ்மனமாக அது இராது. அது வேறு உலகம். அதற்கு இடைப்பட்ட நிலையுண்டு. அது வாழ்வாகும். இரண்டும் ஒன்றே. செயல் தலைகீழே மாறியிருக்கும்.

**பக்கம் 189, பாரா 2**: மனம் சத்தியஜீவியத்தின் முடிவான செயலாகத் தோன்றுகிறது. அதே போல் வாழ்வு சித்-சக்தியின் முடிவான செயலாகத் தெரிகிறது. முழு எண்ணம் (ஜீவ எண்ணம்) சித்-சக்தியின் சிருஷ்டிகர்த்தாவின் நிர்ணயமான உருவம். ஜீவியம் சக்தி. இது ஜீவனின் இயற்கை. இது தன்னையறியும் ஜீவன். இது சிருஷ்டிக்கும் ஞான-உறுதியாக வெளிப்படுகிறது. இது சத்திய ஜீவியம், ஜீவ எண்ணம். சத்தியஜீவிய ஞான-உறுதி சித்-சக்தியாகும். ரூபங்களைச் சிருஷ்டிக்கும் திறனை இது பெற்றுள்ளது. இவை முழு ஜீவனின் ரூபங்கள். அதே போல் மனமும், வாழ்வும் சித்-சக்தியாகும். அது அதே ஞான-உறுதி. தெளிவான தனி நபர் ரூபங்களை நிர்வகிக்குமாறு அவை செயல்படுகின்றன. இது ஒரு வகை வரையறை. எதிர்ப்பு, பரிமாறுதல், ஜீவனின் ரூபம் ஒவ்வொன்றிலும் ஆத்மாவுண்டு. அது தன் மனம், வாழ்வை உற்பத்தி செய்கிறது. மற்றவற்றிலிருந்து பிரிந்தவை போல் அவை செயல்படுகின்றன. உண்மையில் அவை எப்பொழுதும் பிரிந்தவையல்ல. ஒரே ஆன்மா, மனம், வாழ்வின் லீலை அது. ஒரே சத்தியத்தின் பல ரூபங்கள் அவை. வேறு வகையாகக் குறிப்பிடலாம்.

சத்தியஜீவியம் தனி நபராவதில் மனம் முடிவான நிலையென அறிவோம். ஒவ்வொரு ரூபத்திலும் ஜீவியம் தனி நபராகும் வகையது. அதன் நோக்கத்தில் அது வேலை செய்கிறது. பிரபஞ்ச உறவில் அப்படிச் செயல்படுகிறது. இத்தொடர்புகள் அந்நோக்கத்தை வெளிப்படுத்துகின்றன. அதேபோல் வாழ்வு தன்னையறியும் ஜீவனின் சக்தி செயல்படும் முடிவான நிலை. அனைத்தையும் உட்கொண்ட, அனைத்தையும் சிருஷ்டிக்கும் பிரபஞ்ச சத்தியஜீவியம் மூலம் அது செயல்படுகிறது. அதன் சக்திகளை நிலைப்படுத்துகிறது. தனி ரூபங்களை ஏற்படுத்தி, அழித்து, மீண்டும் ஏற்படுத்துகிறது. அப்படி உருவம் பெற்ற ஆன்மாவின் செயலை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது. வாழ்வு இறைவனின் சக்தி. டைனமோ போல் தொடர்ந்து சக்தியை உற்பத்தி செய்கிறது. சூழலின் ரூபங்களுடன் மோதி ஏற்படும் அதிர்ச்சியுடன் விளையாடுகிறது. சூழ்ந்த வாழ்விலிருந்து உள்ளே வரும் அதிர்ச்சியை ஏற்கிறது. அவை அதன் மீது பொழிந்து ஊடுருவுகின்றன. வெளியிலிருந்தும், சூழலிலிருந்தும் அது நடக்கிறது.

**பக்கம் 189, பாரா 3***:* இது ஸ்ரீ அரவிந்தம். வாழ்வு ஜீவிய சக்தியின் ரூபமாகத் தோன்றுகிறது. இது இடைப்பட்டது. இது மனம் ஜடத்தில் செயல்படுவதற்குப் பொருத்தமானது. ஒரு வகையில், இது மனத்தின் சக்தி அம்சம் எனவும் கூறலாம். இங்கு அது சிருஷ்டிக்கிறது. எண்ணத் தொடர்பை இழந்தது. இது சக்தியின் சலனத்திற்குரியது. பொருளின் உருவத்திற்குரியது. இதற்கு உடனடியாக ஒன்றைச் சேர்ப்போம். மனம் தனித்ததில்லை. சத்தியஜீவியம் பூரணமாகப் பின்னணியில் உள்ளது. சிருஷ்டிப்பது சத்தியஜீவியம். மனம் தனிமனித செயலை முடிவாக மேற்கொள்கிறது. அதேபோல் வாழ்வு தனித்த சலனமன்று, தனித்ததுமன்று. அதன் செயல்களின் பின்னணியில் சித்-சக்தியுள்ளது. அந்த சித்-சக்தியே நிலையானது. சிருஷ்டிக்கப்பட்டவற்றுள் எல்லாம் அது செயல்படுகிறது. வாழ்வு அதன் முடிவான செயல், செயலின் அம்சம். வாழ்வு மனத்திற்கும் ஜடமான உடலுக்கும் இடைப்பட்டது. வாழ்வு அவற்றை நம்பி



வாழ்கிறது. நம் எண்ணங்கள் அவற்றின் அம்சங்கட்குட்பட்டன. நமக்கு வாழ்வைத் தெரியாது. அதற்குச் சுபாவம் ஒன்றுண்டு, செயல்படும் வகையொன்றுண்டு. நமக்கு இரண்டும் தெரியாது. சித்-சக்தி அங்குச் செயல்படுகிறது. வாழ்வு அதன் புற அம்சம், கருவி. அது தெரியும்வரை வாழ்வை அறிய முடியாது. தெரிந்தால் வாழ்வு தென்படும். தெரிவதால் வாழ்வை அறிவுடன் நடத்தலாம். அவை தனி மனிதனின் ஆத்ம ரூபங்கள். இறைவனுக்கு அவை மனம், உடலில் செயல்படும் கருவிகள். அது இறைவனின் திருவுள்ளம். மனமும், வாழ்வும் சத்தியப் பாதையில் போக அது உதவும். அப்பாதைகளும் சலனங்களும் வளரும் சத்திய நேர்மையாகும். அவை நம்மிலும் பொருள்களிலும் உள்ளன. அவை தொடர்ந்து சுருங்குகின்றன. அவை அஞ்ஞானத்தில் கோணல் குதர்க்கம். மனம் விரும்பி சத்தியஜீவியத்துடன் இணைய வேண்டும். இன்று அது பிரிந்துள்ளது. அது அஞ்ஞானத்தால் பிரிக்கப்பட்டுள்ளது. எனவே வாழ்வு சித்-சக்தியை அறிய வேண்டும். வாழ்வு தன் நோக்கத்தைப் பூர்த்தி செய்ய இருக்கிறது. அதை ஒரு காரணத்துடன் வாழ்வு செய்வதை நாம் அறியோம். செயலால் இருண்டுவிட்டதால் அப்படியிருக்கிறது. எனவே கண்மூடி அவை சேவை செய்கின்றன. அறியாமல் சேவை செய்கின்றன. வாழ்வையும், ஜடத்தையும் மனத்திற்குட்படுத்த காலம் சுருங்குகிறது. விடுதலை பெற்று பூரணம் பெற வாழ்வு ஒளிமயமாக வேண்டும். அல்லது தன்னைப் பூரணம் செய்யும் ஞானம், சக்தி, ஆனந்தம் செயல்பட வேண்டும்.

**பக்கம் 190, பாரா 4***:* நம் வாழ்வு இருண்ட மனத்திற்குப் பணிவது. மனம் துண்டு செய்யும் கருவி. நம் வாழ்வே இருண்டது. அது துண்டுகளாக்கப்பட்டது. வாழ்வு மரணத்திற்குட்பட்டது. அளவு, பலஹீனம், துன்பம், அறியாமையால் செயல்படுவது ஆகியவற்றிற்கும் உட்பட்டது. நம் சுபாவத்திற்குட்பட்ட மனம் அளவுக்குட்பட்டது. எல்லையால் சூழப்பெற்றது. அதுவே எல்லா துன்பத்திற்கும் காரணம். குதர்க்கத்திற்கு முதல் ஆரம்பம் ஒன்றுண்டு. ஜீவாத்மாவின்

வரையறை தானே அமைத்துக் கொண்டது அது. சுயமாக ஏற்ற அஞ்ஞானம் அதைச் சூழ்ந்தது. அது தன்னைப் பிரத்யேகமான நிஷ்டைக்குட்பட்டதாகக் கருதுகிறது. அது தனித்து தானே வாழும் தனித்தன்மையுடையது. பிரபஞ்ச செயலெல்லாம் அது தன் செயலாகக் கருதுகிறது. தன் ஜீவியத்திற்குத் தானே கூறுவதாக அதைக் கொள்கிறது. அதன் உறுதி, சக்தி, ஞானம், அனுபவத்திற்கும் அதன் சிறு ஜீவனுக்கும் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. அது ஏகனுடைய ரூபம், தெளிந்த ரூபமாகத் தன்னை அறிகிறது. எல்லா ஜீவியத்தையும் தழுவுவதாக அது கொள்கிறது. எல்லா ஞானம், எல்லா உறுதி, எல்லா சக்தி, எல்லா அனுபவம், எல்லா ஜீவன்களையும் அது தழுவுகிறது. எல்லா ஜீவன்களும் தன்னுடன் ஒன்றுபட்டதாக அது கொள்ள வேண்டும். பிரபஞ்ச வாழ்வு அதனுள் சிறைப்பட்டது. அது மனத்துள் சிறைப்பட்டது. அது ஆத்மாவின் உத்தரவை ஏற்பதால் அதுபோலுள்ளது. இவ்விதம் அது தனிச் செயலில் சிறைப்படுகிறது. அது தனி வாழ்வாக இருந்து செயல்படுகிறது. அளவுக்குட்பட்ட பற்றாக்குறைத் திறமையுடையது. அது அதிர்ச்சியை ஏற்கிறது. அதிர்ச்சியையும், பாரத்தையும் அது எளிதில் ஏற்பதில்லை. அதைச் சுற்றியுள்ள பிரபஞ்ச வாழ்வது. பிரபஞ்ச சக்தியுடன் பரிமாறிக் கொள்ளும் நிலையிலுள்ளது. அது பிரபஞ்சத்தில் மாற்றமின்றி அமைந்துள்ளது. அளவுக்குட்பட்ட, எளிய, தனிநபர் வாழ்வது. முதலில் வாழ்வு ஆதரவின்றி உழல்கிறது. பிரம்மாண்டமான பரிமாறுதலை ஏற்கிறது. அது இயந்திரமாகச் செயல்படுகிறது. எதிர்ப்பவை மீதெல்லாம் எரிச்சல்படுகிறது. அவை விழுங்கி, அனுபவித்து, பயன்படுத்தி, ஆட்கொள்கின்றன. ஜீவியம் வளர்கிறது. ஜட இருளிலிருந்து சொந்த ஒளி எழுகிறது. அது சிருஷ்டிக்குரிய பாதை. தனி நபர் வாழ்வு தன் சக்தியை லேசாக அறியும். படிப்படியாக அது முதலில் செயல்படும். அடுத்து அறிய முயலும். வாழ்வின் லீலையைப் பயன்படுத்தவும், அனுபவிக்கவும் முயல்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக அது அந்தச் சக்தியைப் பெறுகிறது. தன்னுள் உள்ள பிரம்மத்தை அப்படி அறிகிறது. வாழ்வு சக்தி. சக்தி பவர். பவர்



உறுதி. தலைமை ஜீவியத்தின் உறுதி அதன் செயல் தனி நபரில் வாழ்வு அதன் ஆழத்தை மெல்ல மெல்ல அறிகிறது. அதுவும் சச்சிதானந்தத்தில் உறுதி சக்தி. அது பிரபஞ்ச தலைவன். தனிப்பட்ட முறையில் அது தன் உலகில் தலைவனாக முயல்கிறது. தனிநபர் வாழ்வு வளரும் உந்துதல். அது தன் பவரை அறிய முயல்கிறது. உலகை அறியவும், ஆளவும் முயல்கிறது. பிரபஞ்ச வாழ்வில் இறைவன் தன்னைப் படிப்படியாக வெளிப்படுத்திக் கொள்கிறான். அதுவே அதன் சாரமான அம்சம்.

**பக்கம் 191, பாரா 5***:* வாழ்வு சக்தி*;* தனி மனிதனின் வளர்ச்சி-யென்பது தனி மனிதனின் சக்தி வளர்வது. இருப்பினும் அது பிரிந்த வாழ்வும் சக்தியுமாகக் காணப்படுகிறது. இப்பிரிவினை அது உலகை ஆள்வதைத் தடை செய்கிறது. எல்லா சக்திகளுக்கும் அதன் வழி வாழ்வு தலைவனாகும். இது பிரிந்து காணும் தனி நபர் ஜீவியமாகும். இதற்குப் பிரிந்துள்ள தனிப்பட்ட பவருண்டு. எல்லா சக்திகட்கும் தலைவனாகும் உறுதி படைத்தது. எல்லா உறுதியாலுமே அதைச் சாதிக்க முடியும். முடியுமெனில், தனி மனிதன் மீண்டும் எல்லா உறுதியும் ஆகியே அதைச் சாதிக்கலாம். அப்பொழுது அது எல்லாச் சக்தியுமாகும். இல்லாவிட்டால் தனி நபருருவம் மூன்று வரையறை-கட்குட்பட்டிருக்க வேண்டும். அவை மரணம், ஆசை, இயலாமை.

**பக்கம் 192, பாரா 6***:* தனி மனித வாழ்வு மரணத்திற்குட்பட்டது. இதை இரு வழியாகச் செய்யலாம். ஒன்று ஒருவர் வாழ்வின் நிலை. அடுத்தது எல்லா சக்திகளுடன் அதன் உறவு. இது பிரபஞ்சத்தில் வெளிப்படுகிறது. தனிநபர் வாழ்வு சக்தியின் குறிப்பிட்ட அம்சம். உருவம் பெற நிர்வகிக்க, சக்தி தரும்படி இது அமைந்துள்ளது. முடிவாக இது கரையும். அதன் பயன் முடிந்தபின் கரைகிறது. கோடிக்கணக்கான ரூபங்களில் இது ஒன்று. அனைத்தும் இந்த ரூபத்திற்குச் சேவை செய்கின்றன. ஒவ்வொன்றும் அதன் இடத்தில், காலத்தில், முடிந்தபடி சேவை செய்கிறது. இது முழு பிரபஞ்ச லீலை. உடலில் வாழ்வின் சக்தியுள்ளது. வெளியிலிருந்து வரும் தாக்குதலை அது சமாளிக்கும். அது பிரபஞ்சத்திற்குரியது. அவற்றை அது

கிரகிக்கும். அதுவே அதற்கு உணவு. அதையே இடைவிடாமல் விழுங்குகிறது. ஜடத்தை உபநிஷதம் அன்னம் என்கிறது. விழுங்குபவன் விழுங்குவதால் விழுங்கப்படுகிறான் என்பதே சூத்திரம். வாழ்வு உடலில் செயல் திறனுக்குரிய முறையைப் பெறுகிறது. அது இடைவிடாமல் புறத் தொடர்புள்ளது. அதற்கு வெளியேயுள்ள வாழ்வால் தாக்கப்பட்டு உடைக்கப்படும் வாய்ப்புண்டு. அதன் விழுங்கும் திறன் போதுமானதாக இல்லை. அல்லது அது முறையாகச் செயல்படுவதில்லை. அல்லது அது நிதானம் பெறவில்லை. அது இரு திறமைகளிடையே அமைந்துள்ளது. ஒன்று விழுங்கும் திறன். அடுத்தது உணவாகப் பயன்படுவது. அல்லது இது ஒரு நிபந்தனை. உணவு புற வாழ்வுக்குரியது. அதனால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது. அதை விழுங்கி விடுவார்கள். அல்லது அதற்குத் தன்னைப் புதுப்பிக்கும் திறனில்லை. அதனால் அது உடைந்து வீணாகிறது. அது புது படைப்பு அல்லது புதுப்பிக்கப்பட்டது. அது மரணத்தை அனுபவிக்க வேண்டும்.

**பக்கம் 192, பாரா 7***:* இது மட்டுமல்ல. உபநிஷதம் என்ன கூறுகிறது எனப் பார்ப்போம். வாழ்வின் சக்தி உடலுக்கு உணவு. உடல் வாழ்வின் சக்திக்குணவு. இதை வேறு வகையாகவும் கூறலாம். வாழ்வின் சக்தி நம்மில் உள்ளது. தேவையான பொருளை அது சப்ளை செய்கிறது. ரூபம் அதனால் உருவாகிறது. அதை நிரந்தரமாகக் காப்பாற்றுகிறது. அதைப் புதுப்பிக்கின்றோம். அதே சமயம் தன் ரூபத்தை அது போதுமான அளவில் பயன்படுத்துகிறது. அது இவ்வழி ரூபத்தை ஏற்படுத்துகிறது. அந்த ரூபத்தைக் காப்பாற்றுகிறது. இவ்விரு செயல்களும் சந்தித்து நிதான-மடைகின்றன. அது குறையுள்ளதாக இருக்கும். அது சிதறலாம். விதிக்கப்பட்ட சட்டத்தை மீறினால் அது சிதறும். வாழ்வின் சக்தியினுடைய பல நீரோட்டங்கள் அவை. அதனால் வியாதி, அழிவு எழும். அவை அழிவைக் கொண்டு வரும். அழிவைத் தடுத்து நிறுத்த போராட்டம் எழுகிறது. மனம் வளர்கிறது. இரண்டும் வாழ்வை நிர்வகிப்பதைச் சிரமமாக்குகின்றன. ரூபத்திற்கு மேலும் சக்தி



தேவைப்படுகிறது. சப்ளைக்கு மீறி சக்தி தேவைப்படுகிறது. சப்ளை, டிமாண்ட் வரையறையை அது மீறுகிறது. ஒரு புது நிதானம் ஏற்பட வேண்டும். அது ஏற்படுமுன் பல குழப்பங்கள் எழும். அவை சமுகத்தைப் பாதிக்கும். அது ஆயுளையும் பாதிக்கும். நிலைமையைச் சமாளிக்க முயற்சி எழுகிறது. அதற்கு எதிர்ப்பு எழுகிறது. அது சூழலில் உள்ளது. அது சக்தி நிறைந்தது. அவை தம்மைப் பூர்த்தி செய்ய ஆசைப்படுகின்றன. அவற்றிற்குப் பொறுமையில்லை. புரட்சி செய்கின்றன. வாழ்வையே தாக்குகின்றன. இவ்வாழ்வே ஆட்சி செய்ய முயல்கிறது. இங்கும் நிதானம் சிதறுகிறது. கடுமையான போராட்டம் எழுகிறது. வாழ்வின் ஆட்சி பலமானது. அதற்கு அளவில்லை. அதனால் புதிய சுமுகத்தை ஏற்படுத்த முடியும். அது சூழலுக்குரியது. *எப்பொழுதும் எதிர்த்து* வெற்றி பெற முடியாது. என்றாவது அது அடங்கி அழிய வேண்டும்.

**பக்கம் 193, பாரா 8***:* இவை அனைத்தும் அவசியமானவை. இவற்றைக் கடந்து அடிப்படையான தேவையொன்றுண்டு. அது இயற்கைக்குரியது. அது பிறவியின் குறிக்கோள். சிறிய அடிப்படையில் பெரிய அனுபவத்தை நாடுவதாகும். கண்டத்தில் கண்ட அகண்டம். ரூபமுண்டு. இது அமைப்பின் அஸ்திவாரம். அனுபவத்திற்கு அளவேற்படுத்துவது அது. ரூபத்தைக் கரைத்தே அதைக் காண முடியும். அது புது ரூபத்தை நாட வேண்டும். ஆத்மா தன்னை அளவுக்குட்படுத்திக் கொண்டுள்ளது. சலனத்தையும் அரங்கத்தையும் முதன்மையாக்கி ஆத்மா அதைச் செய்கிறது. அனந்தத்தைக் காணும் அவசியம் அதை உந்துகிறது. இப்பொழுது அது தொடர் நிகழ்ச்சியாக இருக்கிறது. நிமிஷத்திற்கு நிமிஷம் செயல்படுகிறது. இது காலத்தின் அனுபவமாகும். இதைக் கடந்த காலம் எனக் கூறுகிறது. காலத்துள், அது ஓரரங்கத்தினின்று அடுத்த அரங்கம் செல்கிறது. ஒவ்வொரு அனுபவமாக அது ஒவ்வொரு ஜன்மத்தைக் கடக்கிறது. ஞானம், திறமை, அனுபவம் குவியும் வழி இது. ஆழ் மனத்திலோ, பரமாத்மா-விலோ இந்த ஞாபகம் சேருகிறது. கடந்த கால அனுபவம் சேர்ந்த மொத்தமாகும் இது. இது நடந்தேற ரூபம் மாறுவது அவசியம்.

மனித உடலில் ஆத்மா உள்ளுறை ஜீவனாகும். அதற்கு ரூபம் மாறுவதெனில் உடல் அழிய வேண்டும். இந்தச் சட்டத்திற்கு அது உட்பட்டது. சப்ளை, டிமாண்ட் சட்டமாகும் அது. பொருளின் ரூபம் சப்ளையாகிறது. பொருள் அதற்கு ஈடு கொடுக்க வேண்டும். ஒன்றுக்கொன்று தரும் அதிர்ச்சி இடைவிடாத நிகழ்ச்சி. தொடர்ந்த போராட்டம் நடக்கிறது. ஜீவனை ஏற்ற ஆத்மாவின் போராட்டமது. ஒன்றை மற்றது விழுங்கும் லோகப் போராட்டமிது. இதுவே மரணத்தின் சட்டம்.

**பக்கம் 193, பாரா 9***:* மரணம் அவசியம் என்பதுண்டு. அதுதான் இது. இது வாழ்வை மறுப்பதில்லை. இது வாழ்வு வளரும் வகை. அமரத்துவம் என்பது தொடர்ந்து ரூபம் மாறுவதாகும். அதனால் மரணம் அவசியம். உயிருள்ள பொருள் கண்டமானதால் அது அகண்டத்தை விழைகிறது. அனந்தம் என்பதின் விளக்கம்; அனுபவம் முடிவின்றி மாறுவதாகும். உடலில் மனம் - கண்டமான மனம் - சிக்கியுள்ளது. அது இதை அடையலாம். மாறாத ரூபம் தொடர்ந்து புதுப்பிக்கப்பட வேண்டும். பிறப்புக்கும் இறப்புக்குமிடையே நம் உடலான வாழ்வின் அம்சம் இது. மாறிய ரூபத்தை அப்படியே-யிருக்க அனுமதிக்க முடியாது. காலத்திலும் இடத்திலும் வாழ்வின் அமைப்பு புது ரூபம் நாடுகிறது. இது அனுபவம் மாறுவது. அனுபவிக்கும் மனத்திற்குப் புது ரூபங்களைத் தருவதின் மூலம் இதைப் பெறுகிறோம். புதிய நேரம், காலம், இடத்தில் இது நடக்க வேண்டும். இதற்கு அந்த ரூபத்தின் தோற்றம் மாற வேண்டும். அதை மாற்றாமல், இப்பலன் வாராது. இது மரணத்தின் வாழ்வு. இது அழிவால் நடக்கும். வாழ்வு பெரு வாழ்வால் விழுங்கப்படுவது இது. சுதந்திரமில்லாததால் மரணம் எழுகிறது. இது கட்டாயம். இது போராடும் துன்பம். அடிமைப்பட்டதன் அறிகுறி. இது அசத்தாகக் காட்சியளிக்கிறது. இந்த அவசியம் இப்படி ஏற்படுகிறது. இது உயர்ந்தது. நம் மனம் இதைப் பயங்கரமாகக் கருதுகிறது. நம் மனப்பான்மைக்கு இது கசக்கும். உடைக்கப்பட்டு விழுங்கப்படுவதால் இது நடக்கிறது. அழிக்கப்பட்டு விலக்கப்படுவதாகத் தோன்றுகிறது.



இது மரணம் என்ற கொடுமை. மரணத்தின் பின் வாழ்வை நம்புபவருண்டு. இது தனிப்பட்டது. இதையும் முழுவதும் அழிக்க முடியாது.

**பக்கம் 194, பாரா 10***:* இம்முறை அவசியமானது. ஒன்றையொன்று விழுங்க இது அவசியம். ஜடத்தின் ஆரம்ப சட்டங்களாக இதைக் காண்கிறோம். வாழ்வு பசியென்கிறது உபநிஷதம். பசி என்பது மரணம். இப்பசியால் - *அஸனய மிருத்யு* - இஜ்ஜட உலகம் சிருஷ்டிக்கப்பட்டது. வாழ்வு இங்கு ஒரு அச்சாக அமைகிறது. இது ஜடப்பொருள். ஜடப்பொருள் ஜீவன். ஜீவன் அளவிறந்து பிரிக்கப்பட்டுள்ளது. அளவு கடந்து ஜடம் சேர்ந்த தொகுப்பாகிறது. இரு உந்துதல்கள் உள்ளன. அளவிறந்த பிரிவும், தொகுப்பும் உள்ளன. தனி மனிதன் ஜீவனுள்ள அணு. தனி மனிதன் தன்னை உள்ளபடி காப்பாற்ற முயல்கிறான். அது தன்னையும் திரட்டி தொகுப்பாக்க முயல்கிறது. இதுவே ஆசையின் முழு அர்த்தம். வாழ்வின் உந்துதல் தடுக்க முடியாதவொன்று. இது ஜட, பிராணன், தார்மீக, மனம் வளரும் வழி. அனைத்தையும் தழுவி உட்கொள்ளும் அனுபவத்தால் இதைச் செய்ய வேண்டும். இது அனைத்தையும் தழுவி உட்கொள்ளும் உரிமை. இது அனுபவம், கிரகிப்பது, இரண்டறக் கலப்பது, தவிர்க்க முடியாதது. இது அடிப்படையான அனுபவம். இது துண்டாடப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டது. இதற்கு இரகஸ்யமாக அனந்தத்தை அறியும் திறனுண்டு. இது அனைத்தையும் தழுவும், உரிமையாகப் பெறும். ஒரு இரகஸ்ய ஜீவியம் உண்டு. இதைச் சாதிக்கும் உந்துதலுண்டு. இது பிரபஞ்ச தெய்வத்தின் வேகம். பிறவியின் வேகமான பாசம் இது. ஒவ்வொரு ஜீவராசி-யிலுமுள்ளது. இதை முதலில் வாழ்வில் பெற முயல்கிறது. வளர்ந்து பரவியிதையடைய முடிகிறது. இது ஜட லோகம். இதைச் சூழலை உணர்ந்து தான் செய்ய முடியும். இது சூழலைச் சாப்பிடும். தன்னைத் திரட்டி இதைச் செய்ய முயல்கிறது. பிறரைத் தன்னுள் கிரகித்துச் செயல்படுகிறது. அல்லது பிறர் பெற்றதைக் கிரகித்துக் கொள்கிறது. இது அவசியம். இதுவே பிரபஞ்சத்தில் பசியிருக்கும் காரணம். இது

எல்லா ரூபத்திலும் உண்டு. மேலும் பிறரைச் சாப்பிடுவதைச் சாப்பிட வேண்டிய அவசியமுண்டு. இது பரிமாறும் சட்டம். செயலுக்குப் பதில் செயல். இதன் திறன் அளவுக்குட்பட்டது. அதனால் இது தீர்ந்து விடக்கூடியது. உலக வாழ்வை ஆட்சி செய்கிறது, தான் கிரகிக்க உட்படுகிறது.

**பக்கம் 195, பாரா 11***:* தன்னையறியும் மனத்தில் பிராணனுடைய பசி உயர்ந்த நிலைக்கு மாறுகிறது. பிராணப்பசி ஆழ்மன வாழ்வுக்குரியது. பிராணனின் பசி மனத்தில் ஆசையாகிறது. அறிவின் வாழ்வில் அது மன உறுதியின் வேகம். அறிவின் வாழ்வு சிந்தனைக்குரிய வாழ்வு. ஆசையின் அசைவு தொடரும். தனி மனித வாழ்வு போதுமான அளவுக்கு வளரும் வரை ஆசையின் வளர்ச்சி தொடரும். அதன் பின் அவன் தன்னை ஆளும் மனிதனாகிறான். அனந்தத்துடன் அவன் ஐக்கியம் வளர்கிறது. அது இப்பிரபஞ்சத்தை அனந்தமாக ஆட்கொள்கிறது. ஆசையே முக்கியம். தெய்வீக வாழ்வின் சட்டம் அதன் முடிவை நிர்ணயிக்கிறது. பிரபஞ்சத்தின் மனிதன் தன்னை வலியுறுத்துவதன் முடிவு அது. அதை அழிக்க முயலும் முயற்சி அது. தமோ குணத்தை ஆதரிப்பது இது. தெய்வீக வாழ்வின் சட்டத்தை மறுப்பது அது. அது வாழ மறுக்கும் உறுதி. அது அஞ்ஞானமாக இருப்பது ஆச்சரியமில்லை. அனந்தமாகாமல் தனி மனிதனாக இருப்பதை மறுக்க முடியாது. ஆசை ஆசையாக இராது. அனந்தத்தின் ஆசையாகி அது மாறுகிறது. இது அதற்குத் திருப்தி தருவது. இது உயர்ந்த பூரணம். இதனால் எழும் திருப்தி அளவு கடந்தது. அனந்தத்தில் அனைத்தையும் உட்கொள்ளும் ஆனந்தத்திற்குரியது இது. இதனிடையில் அது ஒரு தரத்தினின்று அடுத்த தரத்திற்கு உயர வேண்டும். ஒன்றையொன்று விழுங்குவதில் உள்ளது இப்பொழுது. பரஸ்பரம் உதவி செய்யும் நிலைக்கு வர வேண்டும். அது சந்தோஷம் வளரும் தியாகம். இதைப் பரிமாறுதலால் சாதிக்கலாம். ஒருவன் தன்னை மற்ற அனைவருக்கும் பரிமாறிக் கொள்கிறான். கொடுப்பது திரும்பி வருகிறது. தாழ்ந்தது உயர்ந்த-தற்குத் தன்னை அர்ப்பணம் செய்கிறது. உயர்ந்தது தன்னைத்



தாழ்ந்ததற்குத் தருகிறது. ஒன்று மற்றதில் பூரணம் காண்கிறது. மனிதன் இறைவனுக்குத் தன்னை அர்ப்பணம் செய்கிறான். இறைவன் மனிதனுக்குத் தன்னைத் தருகிறான். தனி மனிதனில் அனைவரும் உள்ளனர். பிரபஞ்சத்தில் அனைவரும் உள்ளனர். ஒவ்வொருவரும் பிறருக்குத் தன்னைத் தருகின்றனர். ஏகன் பிரபஞ்ச சித்தியை ஏற்கிறான். இது இறைவன் தரும் ஈடு. எனவே பசியின் சட்டத்தோடு அன்பின் சட்டம் உள்ளது. துண்டு செய்யும் சட்டம் உள்ளது. ஐக்கியத்தின் சட்டமும், மரணத்தின் சட்டமும், அமரத்துவத்தின் சட்டமும் உள்ளன. அவை பரிமாறிக் கொள்-கின்றன. ஆசைக்கு அவசியம். ஆசை நியாயம் என்பது இதுவே. ஆசைத் தன்னைத் தானே இவ்விதம் பூர்த்தி செய்து கொள்கிறது. இது முடிவு. இது பிரபஞ்ச செயல்.

**பக்கம் 195, பாரா 12***:* வாழ்வு மரணம் என்ற முகமூடியை அணிந்துள்ளது. இது சலனத்தின் விளைவு. இது கண்டத்தின் சலனத்தால் ஏற்பட்டது. சிறியது தன் அமர வாழ்வை வலியுறுத்துகிறது. ஆசை ஜீவனுடைய சக்தியின் வேகம். அது தனிப்பட்டது. அது வளரும் தன்மையுடையது. காலம், இடத்திற்கேற்ப மாறுகிறது. அது தொடர் நிகழ்ச்சி, பிரம்மத்தின் வெளிப்பாடான நீட்சி. அது கண்டத்தின் கருத்தமைப்புக்குள் அமைவது. அது சச்சிதானந்தத்தின் ஆனந்தம், அனந்தமான ஆனந்தம், உந்துதல் ஆசையென்ற போர்வையாக எழுகிறது. இது வாழ்வின் மூன்றாவது அம்சத்தினின்று நேரடியாக வருகிறது. இது இயலாமையின் சட்டம். வாழ்வு அனந்தமான சக்தி. கண்டத்தின் நிர்பந்தப்படி வேலை செய்கிறது. தனிப்பட்ட செயல் வெளிப்படையாகிறது. இது கண்டத்திற்குரியது. இதன் செயல் முழுவதிலும் இதன் எல்லா வல்லமையும் வெளிப்படும். இது அளவுக்குட்பட்ட திறனாகச் செயல்படும். இதன் இயலாமை பகுதியானது. தனிநபர் செயல்கட்குப் பின்னால் ஏதோ ஒன்றுள்ளது. அது பரமாத்மாவும், பாதாளமுமாகும். அது பலஹீனமானதாக, பலனற்றதாக, தடுமாறுவதாக இருக்கலாம். அதன் எல்லாம் வல்லமை அளவு கடந்தது. இது தவிர்க்க முடியாதது.

இதன்றி பிரபஞ்சத்தில் அணுவும் அசையாது. இது பிரபஞ்ச செயலின் தொகுப்பு. ஒவ்வொரு செயலும், சலனமும் அதற்குரியது. எல்லாம் வல்ல எல்லாம் அறிந்ததின் தொழிற்பாடு இது. இது சத்தியஜீவியமாகிறது. இது எல்லாவற்றுள்ளும் உள்ளது. வாழ்வின் சக்தி தனிப்பட்டதாகிவிட்டது. இது அதன் ஜீவியத்திற்குள் செயல்படும். இது இயலாமையால் நிறைந்தது. இது வாழ்வின் சக்திக்கு எதிராக வேலை செய்யும். சூழலில் நிறைந்த சக்தி. இவை தனிப்பட்டவை. இது அனந்தமான வாழ்வால் கட்டுப்படுத்த வேண்டியது. இது மறுப்பு செய்யும். இதன் முழு உறுதிக்குரிய போக்குண்டு. இந்த போக்கு உடனே ஒத்து வாராது. இது சக்தியின் வரையறை. இது இயலாமையின் அம்சம். இவை மூன்று, இது மூன்றாவது. இது தனிப்பட்ட, பிரிக்கப்பட்டது. மறு நோக்கில் வேறொன்றுண்டு. இது சுய வளர்ச்சியால் ஏற்படுவது. அனைத்தையும் பெற முயல்வதும் உண்டு. அளக்கவோ, அளவீடு செய்யவோ இல்லை. இப்பொழுதுள்ள சக்தி, திறமையால் இதைச் செய்யலாம். எனவே இடைவெளி, இது இரு உந்துதல்களிடையேயுள்ளது. ஒன்று ஆக்ரமிப்பது, அடுத்தது ஆக்ரமிப்புக்குள்ளானது. ஆசை அங்கு எழுகிறது. அப்படிப்பட்ட வேறுபாடில்லை. அது உண்மையானால் சக்தி தன் பொருள்களை ஆக்ரமிக்கலாம். அதன் நோக்கம் நிலையாகப் பெறக்கூடியது. அப்படியானால் ஆசை அங்கு எழாது. அமைதியான சுய ஆட்சியேயிருக்கும். அதற்கு மனத்தை உறுத்தும் ஆசையிருக்காது. திருவுள்ளம் அது.

**பக்கம் 196, பாரா 13***:* தனிப்பட்ட சக்தி என்பது மனத்தின் சக்தி. மனம் அறியாமையிலிருந்து விடுபட்டதெனக் கொள்வோம். அப்படியானால் இப்படிப்பட்ட வரையறையிருக்காது. எந்த ஆசையும் குறுக்கிடாது. மனம் சத்தியஜீவியத்தினின்று பிரியாது. பிரியாத நிலையில் தெய்வீக ஞான மனமாகும். அதற்குத் தன் மனம் தெரியும். அதன் வீச்சும், அதன் செயல்களின் பலனும் தெரியும். அந்நிலையில் போராட்டத்தை நாடாது. தானே வரையறுத்துக் கொண்ட சக்தியை வெளியிடும். அதுவே அதன் உடனடியான குறிக்கோளாகும்.



தற்காலத்தை அது நீட்டவல்லது. உடனே பலன் தராத திட்டங்களை அது மேற்கொள்ளும். அவை அளவுக்கோ, ஆசைக்கோ உட்படா. அவை இறைவன் பெற்ற தோல்விகள். அவை எல்லாம் அறிந்த, எல்லாம் வல்ல செயல்கள். அதற்குச் சரியான நேரமும், சந்தர்ப்பமும் தெரியும். ஏற்றத் தாழ்வுகளை அறியும். பிரபஞ்ச வாழ்வின் உடனடி பலன்களும், நீண்ட கால முடிவுகளையும் அது அறியும். சத்திய ஜீவியமும், ஞான மனமும் எல்லாம் அறிந்தவற்றின் செயலில் பங்கு கொள்ளும். அது அனைத்தையும் நிர்ணயிக்கும் சக்தி. தனிப்பட்ட திறன் இங்குச் சக்தியாகும். இது என்ன என்று கண்டோம். இது தனிப்படும் மனத்தின் சக்தி. அது அறியாதது. அது சத்தியஜீவிய ஞானத்தை இழந்தது. எனவே இயலாமை அவசியம். வாழ்வுடன் தொடர்பு கொள்ள அது அவசியம். உள்ள சந்தர்ப்பத்தில் அது தவிர்க்க முடியாதது. அதுவே நடைமுறையில் எல்லாம் வல்லதாகும். இது அறியாமையின் சக்தி. அளவுக்குட்பட்ட நிலையிலும் இதைக் கருத முடியாது. அதன் ராஜ்யத்தில் இறைவன் செயலை அவை எதிர்க்கா. இறைவன் எல்லாம் அறிந்தவன், எல்லாம் வல்லவன். செயல்களின் விதிக்கப்பட்ட போக்கை அது முழுவதும் மாற்றும். இது நாம் ஏற்க முடியாதது. பிரபஞ்ச நிலை. அளவுக்குட்பட்ட சக்தி போராடும் நிலையிது. இப்போராட்டத்தால், அதன் திறமையை வளர்த்துக் கொள்கிறது. தெய்வீக உந்துதலால் இது செயல்படுகிறது. தெரிந்து விரும்பும் பிறவியுணர்ச்சியிது. இதுவே வாழ்வின் முதற் சட்டம். ஆசையின் சட்டமே போராட்டத்திற்கும் உரியது. பரஸ்பரம் உதவியான பலப்பரிட்சையாக இது உயரும். தெரிந்து போரிடும் ஒன்று போன்ற சக்திகள். இதில் வென்றவனும், தோற்றவனும் பலன் பெற்று உயர்கிறான். மேலிருந்து செயலுக்கு உதவி வருகிறது. கீழிருந்து எதிர்ப்பால் எழும் இதர சக்திகளுண்டு. இருவருக்கும் பலன் உண்டு. அன்பின் வலிமையான பிடியுண்டு. போராட்டத்தின் இரும்புப் பிடியும் உண்டு. இறைவனுடன் பரிமாறுதலால் ஓர் இன்ப அதிர்ச்சி எழுகிறது. இருந்தாலும் போராட்டம் அவசியம். இது விரும்பத்தக்க ஆரம்பம். தெய்வீக வாழ்வின் திருமூர்த்திகள் –

மரணம், ஆசை, இயலாமை. தெய்வீக வாழ்வின் சட்டத்தின் மூன்று முத்திரைகளுடன் பிரபஞ்சம் தன்னை வலியுறுத்துவதின் முதல் முயற்சியது.

*முற்றும்.*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

வாழ்வில் பொய்யும் மெய்யும் ஒரே திறனுடையவை. நோக்கம்தான் வேறு. காரியம் முடியும் என்று மனிதன் நம்பினால் மனிதன் எந்தத் திறமையையும் ஏற்றுக் கொள்வான். ஓரளவுக்கு அது ஆதாயமாக முடியும். எல்லையைத் தாண்டினால், பலன் எதிராக அமையும்.

விவரம் தெரியாதவர்கள், கேட்பவற்றையெல்லாம் நம்புபவர்கள், தாழ்ந்த பழக்கத்தை மேற்கொள்ள முடியாத பண்பாளர்கள் ஆகியவர்களைப் பொய்யின் சாகஸம் பிசைந்தெடுக்கும்.

இன்றைய நிலையில் இவர்களுக்கு அதிகமான வசதியுண்டு. அதற்கெதிரான அறிவை உலகம் பெற்றால் ஆயிரமாண்டுகள் முன்னேறும். தனி மனிதனுக்கும், உலகத்திற்கும் இந்த அறிவைக் கொடுப்பது அன்னைக்குச் செய்யும் சேவை.

***பொய்யின் சாகஸத்தால் சத்திய சேவை செய்ய முடியாது.***



# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

186. *அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.*

✧ **அடிமேல் அடி அடித்தாலும் நகராத அம்மி பாதாளம்.**

187. *இனிமேலா என் பெண்ணுக்கு மாப்பிள்ளை பிறக்கப் போகிறான்?*

✧ **பிரச்சினைக்குரிய தீர்வு பிரச்சினையிலேயே உள்ளது.**

188. *வைக்கத் தெரியாமல் வைக்கோல் போரில் வைத்தான்.*

✧ **வைக்கோல் போரில் வைத்ததும் பாதுகாப்பாக இருக்கும்.**

189. *மலையைக் கெல்லி, எலியைப் பிடிப்பது போல.*

✧ **மலையைக் கெல்லும் எலி.**

190. *பையன் பார்த்த பயிர்.*

✧ **பையன் பார்த்த பயிர் பெரும் பயிர்.**

*தொடரும்....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

முழுமையாக வளர்ந்த திறமை (skill) பெருஞ்சக்தி (energy) பெற்றால் திருப்தி ஏற்படும்.

***பெருந்திறமை முடிவற்ற சக்தி பெற்று திருப்தி தரும்.***

# அன்பு அமிர்தமாகி,
# அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

- **ஜடமான மனம் நிர்வாணத்தை நாடுகிறது. இது எதையும் நம்பாது. இது புத்தருடைய நிலை.**
- **(Vital mind) பிராணனுக்குரிய மனம் மாயையைத் தேடுகிறது. இது சங்கரருடைய நிலை.**
- **அறிவுக்குரிய மனம் பிரம்மத்தை நாடுகிறது. இது உபநிஷத ரிஷிகள் நிலை.**

இதெல்லாம் தத்துவம், பெரிய தத்துவம்.

நம் வாழ்க்கைக்கு நேரடியாகப் பயன்படும்.

உடலால் வாழ்ந்தால் எதையும் நம்ப முடியாது (agnosticism).

உயிரால் வாழ்ந்தால் நல்லதும் கெட்டதும் மாயமாகும், மூட நம்பிக்கையாகும்.

மனத்தால் வாழ்ந்தால் பிரம்மம் இலட்சியமாகும்.

அன்னை அளிப்பது ரிஷிகள் காணாத பிரம்மம்.

அது முழு பிரம்மம்.

பிரம்மானந்தம் என்று ரிஷிகள் கூறுவது நிஷ்டையில் நம்மை மறந்த நிலையில் அனுபவிப்பது (Bliss).

அதே ஆனந்தம் விழிப்பில் பெறுவது அன்னை அளிப்பது, delight.

Delight என்பதைச் சிருஷ்டியின் ஆனந்தம் எனலாம்.

அது உள்ளபொழுது தீமை, மரணம், வலியில்லை.

அகந்தை அழிந்தால் ஆனந்தம் delight எழும்.



பிரார்த்தனை பலிக்கும்பொழுது, பலனை ஒதுக்கிவிட்டு உள்ளுணர்வைக் கவனித்தால், உள்ளே பெரிய ஆனந்தலோகம் க்ஷணம் எழுவது தெரியும்.

ஆனந்தம் (Delight) தான் நம் பிரார்த்தனையைப் பூர்த்தி செய்வது.

இந்த ஆனந்தத்திற்கும் நமக்குமிடையே ஒரு திரையுண்டு.

30 அல்லது 100 நாள் தயார் செய்து, ஒரு நாளில் இதயத்தை முழுவதும் திறந்தால், இந்த ஆனந்தம் தெரியும். அப்படிப்பட்ட முயற்சியை நிபந்தனையின்றிச் செய்ய வேண்டும்.

அதற்குப் பின் பெரிய பக்குவம் தேவை.

அது இல்லை.

தயார் செய்து அதை 1 நாள் அல்லது 1 மணி நேரம் அனுபவிக்கலாம்.

- **நம்பிக்கை அதிகமானால் பணம் பெருகும்.**

- நம்பிக்கை என்பது பிறருக்கு நம்மீது நம்பிக்கை.

  நமக்குப் பிறர் மீது நம்பிக்கை.

  நமக்குப் பணத்தின் அமைப்பின் (organisation) மீது நம்பிக்கை.

  பணம் நடமாடும் பாங்க் மீது நம்பிக்கை.

  பணம் உலவும் இன்டர்நெட் மீது நம்பிக்கை.

  நம்பிக்கையின் அளவு (volume), தரம் (standard) அளவு கடந்து உயர முடியும்.

  சர்க்காரை ஏற்படுத்திய சமூகத்தின் மீது நம்பிக்கை.

  சமூகத்தை ஏற்படுத்திய கடவுளின் மீது நம்பிக்கை.

- இந்த அம்சங்களால் நம்பிக்கை அளவு கடந்து உயர முடியும்.

எந்த அளவு இந்த நம்பிக்கைகள் உயருமோ அந்த அளவு பணம் வரும்.

- பணம் பர்சனாலிட்டியைப் பொருத்தது.

  பர்சனாலிட்டி வலிமை, ஞானம், நிதானம், நம்பிக்கை (strength, knowledge, trust, faith) ஆகியவற்றைப் பொருத்தது.

  *The Life Divine* பர்சனாலிட்டியை வளர்க்க வல்லது.

  அதன் தத்துவங்களை (70-770-1452)* மனம் புரிந்து ஏற்பது பர்சனாலிட்டி உயர வழி செய்யும்.

- அடிப்படை மெய். எண்ணம், சொல், உணர்ச்சி, செயல் ஜீவியம், ஜீவனில் உள்ள மெய்.

  அடுத்தது நல்லெண்ணம், பரந்த மனப்பான்மை.

- சுருக்கிச் சொன்னால், மனம் பணத்தின் வரலாற்றையும் (structure) அமைப்பையும், அதன் (functions) செயலையும் புரிந்து அதன் (organisation) அமைப்பு நம் மனத்தால் ஏற்பட்டது என அறிந்து அம்மனத்தை மெய்யால், நல்லெண்ணத்தால், பரந்த நோக்கால் ஏற்றுக்கொண்டால், அந்த அளவு பணம் தானே நம்மை வந்து அடையும். தானே வராவிட்டால் ஒரு சிறு முயற்சி அதைப் பெற்றுத் தரும்.

- சிறிய சோதனை பெரிய பலன் தருவதைக் காணலாம்.

  சோதனை முழு மெய்யால் சூழப்பட வேண்டும்.

  அதற்கு விதிவிலக்கில்லை. ஓரிழையும் விலக்கில்லை.

  வெற்றி தருவது சத்தியம்.

  மனிதன் கற்பனை செய்ய முடியாத கனவு பலிக்கும்.

---

* 1452 பாராக்களில் 1452 கருத்துகளுண்டு.
அவற்றிலிருந்து 770ஐ எடுத்து Daily Message – Volume-15இல் எழுதியுள்ளேன்.
அவற்றைச் சுருக்கி 70 கருத்துகளைப் பல புத்தகங்களில் எழுதியுள்ளேன்.



*"உலகம்-மோட்சம்-ஸ்ரீ அரவிந்தம்"* படித்தால் அது பலிக்கும்.

இதுவரை எந்த உறவுக்கும் (உடன் பிறந்தவர், தம்பதி, கூட்டாளி) பலிக்காத பெரிய நிலையிது. இதுவரை எவரும் பெறாத உயர்ந்த நிலையிது. உள்ளம் உயர்ந்து செல்வம் உயரும் முறை இது.

## ✡ பிரெஞ்சு சாதகர் - டேப்பிஸ்ட்ரி.

நாம் பெரியவர் உட்கார்ந்த நாற்காலியில் உட்காரமாட்டோம். மேல் நாட்டாருக்கு அது போன்ற பழக்கமில்லை. அவர்கட்கு எல்லாம் நாற்காலிதான். பகவானும் அன்னையும் உட்கார்ந்து தரிசனம் தரும் சோபாவுக்கு மேல் சுவரில் ஒரு டேப்பிஸ்ட்ரி (tapestry) தொங்க விடவேண்டும். சம்பக்லாலும், ஒரு பிரெஞ்சு சாதகரும் அதை எடுத்துக் கொண்டு போனார்கள். பிரெஞ்சுக்காரர் சோபாவில் ஏறி நின்று டேப்பிஸ்ட்ரியை சுவரில் மாட்டினார். அவர் சோபா (பகவான் உட்காருவது) மீது ஏறி நிற்பது சம்பக்லாலுக்கு நெருப்பை மிதித்தது போலிருந்தது. இந்தப் பிரெஞ்சு சாதகர் (sincerity) உண்மைக்குப் பேர் போனவர். நம் நாட்டுப் பழக்கம் தெரியாது. அவர் இயல்பாக இதைச் செய்துவிட்டார். கடைசி நாட்களில் இவருக்கு இரண்டு கால்களும் நடக்க முடியவில்லை. இதிலுள்ள தத்துவங்கள் பல.

- மூடநம்பிக்கை மூடர்களைத்தான் பாதிக்கும். (நாற்காலி புனிதமானது என்பது மேல்நாட்டாருக்கு மூடநம்பிக்கை).
- மூடநம்பிக்கையைக் கடந்து ஒரு உண்மையுண்டு என்றால் அதற்குச் சக்தியுண்டு (பகவான் உட்கார்ந்த நாற்காலி புனிதமானது என்பது மூடநம்பிக்கையில்லை. அது ஆன்மீக உண்மை).
- மனம் உண்மையாக இருந்தால், தெரியாமல் செய்த தவறு பாதிக்காது. (இங்கு வாழும் மேல்நாட்டார் ராகுகாலம்

பார்ப்பதில்லை. அது அவர்களைப் பாதிப்பதில்லை. நம்மை பாதிக்கும். நாம் நம்புவதால் பாதிக்கும்).

- இந்த பிரெஞ்சுக்காரர் கால்கள் பாதிக்கப்பட்டன. (நெருப்பைத் தெரியாமல் தொட்டாலும் சுடும். மின்சாரம் தெரியாமல் தொட்டாலும் ஷாக்கடிக்கும்).
- மூடநம்பிக்கை, மற்ற சக்தி வாய்ந்த நம்பிக்கைகளைவிட அன்னை மீதுள்ள நம்பிக்கை அதிகமானால், அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தை நமக்கு அன்னை கொடுப்பதில்லை.

இறைவன் செயல்படும் வழிகளை அறிய இது முக்கியமான நிகழ்ச்சி.

இறைவன், தெய்வம் எப்பொழுதும் கைவிடாது.

தெய்வம் கைவிடாது என்ற உண்மையைக் காணலாம்.

வாழ்வு தவறாது, யதார்த்தம் என்பதை எவரும் மீற முடியாது.

அப்படியானால் நாம் எதைப் பின்பற்றுவது?

மனிதன் தன் சுபாவத்திற்கு (personality)த் தகுந்தவாறு சமாளிக்கிறான் adjust செய்து கொள்கிறான்.

இந்தப் பிரெஞ்சுக்காரரைவிட (sincere) உண்மையானவரிலர். இவர் நம்மிடம் உள்ள அமெரிக்கர் போல.

அதனால் அவர் ஸ்ரீ அரவிந்தர் சோபா மீது நின்றாலும் தவறு வரக்கூடாது.

பகவான் உட்கார்ந்த இடம் புனிதம்.

அப்புனிதம் பாதிக்கப்பட்டால், (Life not God, will act) வாழ்வு செயல்படும்.

வாழ்வு செயல் (Life act) படுவது எனில் நுனி மரத்தில் உட்கார்ந்து அடி மரத்தை வெட்டினால் கீழே விழுவான். (This is a rule of life). இது வாழ்வின் சட்டம்.

பகவான் அருள், வாழ்வு சட்டத்தை (grace, life rule) மீறி பிரெஞ்சுக்காரருக்கு உதவாது.

என் குரு ஸ்தானத்திலிருந்தவருக்கு எழுதிக் கொடுத்தபின்



என் உண்மை sincerity என்னைக் காப்பாற்றியது.

உண்மை (Sincerity)க்கு உரிய சக்தி power நம் மனத்தைப் பொருத்தது.

அதனால்தான் எந்தச் சிறிய disciplineம் 100% பின்பற்றினால் பெரிய பலன் தருவது.

இருவரிடையே ஒரு பொன்னான சட்டமுண்டு.

இருவர் இங்கு ஆரம்பிக்கலாம். எதுவும் தவறு வாராது.

இருவர் முழு உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

சீக்கிரம் வாழ்வு பரிமளித்து ஆனந்தம் பொங்கும்.

இருவரிடையே எதுவும் விஷயமில்லை. நாமும், நம் உண்மையும் sincerityம் முக்கியம்.

நிமிஷத்திற்கு நிமிஷம் நடப்பது நம் மனத்தைக் காட்டும்.

பழைய நினைவு பாதிக்கும்.

நினைவு சரியில்லை.

சொல் எழக்கூடாது, எழவே கூடாது.

எதுவும் பேசவோ, நினைக்கவோ முடியாத நிலை நல்லது.

அது சரி என்பதற்கு அடையாளம் அது சந்தோஷம் தரும்.

அல்பம், சொல்பம், அசிங்கம், சிறியது, மூடநம்பிக்கை.

(Silly, shabby, shallow, superstitious fools)......(1)

நிதானமான, திறமையான, ஆழ்ந்த, அறிவுள்ள மனம்.

(Serious, organised, deep, rational minds).......(2)

(2) வேண்டும், (1) வேண்டாம்.

பிரெஞ்சுக்காரருக்கு வந்த பாதிப்பு எவருக்கும் வரக்கூடாது.

தவறு வருவது தவறு.

தவறியும் தவறு வரக்கூடாது.

பகவான் உட்கார்ந்த சோபாவில் நம் பழக்கம் தெரியாமல் நின்றாலும் பாதிக்காத அளவு உண்மையிருக்க முடியுமா? முடியும்.

- அது இருந்தால் நாற்காலி மீது ஏறும் சந்தர்ப்பம் வாராது.
- அப்படி ஏறும் நிர்ப்பந்தம் ஏற்பட்டால், அதுவும் பாதிக்காது.
- வாழ்க்கையை நம் கால் எந்த ஆழத்தில் ஏற்றுக் கொண்டுள்ளதோ அதைவிட ஆழமான பக்திக்குப் பாதகம் ஏற்படாது.

✡ **அன்னையுடனிருந்தவர் பேசிய சொல்லின் பலன் - அவரிடமிருந்து அன்பர் பெற்ற போட்டோ.**

பம்பாயில் கணவன், மனைவி மோட்டார் பைக் விபத்தில் சிக்கி, மனைவியின் நிலை ஆபத்திற்குள்ளாயிற்று. அவர் தமக்கை ஆசிரமத்திலிருந்தார். அவர் போய் தங்கைக்கு உதவி புரிய விரும்பினார். அவர் பம்பாய் போகாமல் ஆசிரமத்திலிருந்தால் அன்னை சக்தி தங்கையை விரைவில் குணப்படுத்துமென அறிந்து, அவர் போகவில்லை. தங்கைக்கு அருள் சென்றது. எல்லாக் காயங்களும் பூரணமாகக் குணமாயின. பேச்சு வரவில்லை. அன்னை, பகவான் பெயர்கள் மட்டும் பேச முடிகிறது. ஆசிரமம் வந்து, அன்னையைத் தரிசனம் செய்து இந்த விபரங்களைத் தெரிவித்தனர். அப்பொழுது அன்னையுடனிருந்தவர்,

‘‘அன்னை, பகவான் என்ற சொற்களைப் பேசினால் போதுமே’’ என்றார்.

நெடுநாள் கழித்து அவருக்குப் பேச முடியவில்லை.

அந்த இரு புனிதச் சொற்களையும் அவரால் பேச முடியவில்லை.

- **பேச்சுக்குச் சக்தியுண்டு.**
- **பேசாமலிருப்பது நன்று.**
- **பேசினால் நல்லெண்ணத்தால் மட்டும் பேச வேண்டும்.**



**அன்னையுடனே இருந்தாலும், கர்மத்தை மீறி அன்னையை நம்புவது சிரமம். அப்படிப்பட்ட நம்பிக்கைக்குக் கர்மம் பாதிக்காது. சொல்லும் சொல் நல்ல பலன் தரும். அப்படி அவர் அன்னையிடம் கூறியவுடன் பேச முடியாதவருக்குப் பேச்சு வரும். அது திருவுருமாற்றம். நம்பிக்கை.**

போன ஜென்மத்தில் அன்னையுடனிருந்தவர் ரிஷியாகவும் Mother அவருக்குத் தாயாராகவுமிருந்தார்.

பகவானுடனும், அன்னையுடனும் 40 வருஷமாக இருந்தவர்.

பாண்டிச்சேரி வழியாகப் போவதும் புண்ணியம்.

Mother பெயரைக் கேட்பதும் (grace) **அருள்**.

சாதகர்களை (sadhaks)விடப் புண்ணியம் பண்ணியவர் உலகில் இலர்.

இது மலை போன்ற பெரியது.

Life, வாழ்வு என்பதும் infinite. ஏனெனில் எல்லாமே infinite.

அந்த இடத்தில் அந்த விஷயத்தை ஏற்காமல் துரும்பும் அசையாது.

ஜனாதிபதியும் (President), படிக்காதவனுக்கு (peon) பியூன் வேலையும் தர முடியாது - சட்டம் சக்தி வாய்ந்தது.

குதர்க்கமாகப் பேசினால் குதர்க்கத்திற்குப் பவர் உண்டு.

பேச்சை இழந்தவர் அன்னையிடம் Mother, Sri Aurobindo என்ற சொற்களைத் தவிர வேறு சொல் பேச முடியவில்லை என்றார்.

உடனிருப்பவர் குறுக்கே வந்து வேறு வார்த்தை பேசுவது அவசியமில்லை என்றார்.

அவருக்கு அந்த வார்த்தைகளும் கடைசியில் பேச முடியவில்லை.

சொந்த ஊர் போய் அங்குக் காலமானார்.

சென்னை அன்பர் அவரிடம் போட்டோ பெற்றார்.

வீட்டில் கரண்ட் போய்விட்டது.

*இரண்டு உண்மைகள்:*

1) எவ்வளவு பெரிய புண்ணியத்தை மீறியும் மனிதன் சிரமப்பட (suffer) அவன் குதர்க்கம் வழி செய்யும்.
2) எவ்வளவு கடைசி கட்டமானாலும் அதை மீறி முழு அருள் (grace) பெற மனிதனுடைய பணிவு, நல்ல குணம் வழி செய்யும்.

நெருங்கிய இருவர் அடுத்தவருக்குக் கூறுவது,

"I wish to be your slave in every respect".

“என் கடன் உன் எண்ணத்திற்குப் பிரியமாகப் பணிவதே”.

எண்ணம் இதுவானாலும், நடைமுறை உணர்ச்சியும், செயலும் உயர்வாக இருக்க வேண்டும்.

இன்றுள்ள நிலைக்குள்ளபடி ஆரம்பித்தால் இதைச் சாதிக்கலாம். ஒருவரே செய்யலாம், போதாது.

ஒத்துழைப்பு (cooperation) இருந்தால் சுலபம் - பதில் எழுவது ஒத்துழைப்பு (cooperation) இல்லை என்பதாகும்.

இருவர் ஒருவருக்கொருவர் கூறக்கூடியன:

“என் வாழ்வு நம் வாழ்வில் பூர்த்தியாகும்”.

("My life will be fulfilled in the fulfillment of *OUR* life").

“என் இதயம் திறந்தால் அது அனந்தமாக இருக்கும்”.

("My heart can open. When it opens, it will be infinite").

“அன்னை பெரியவர். அடுத்தவர் அதைவிடப் பெரியவர்”.

("Mother is great. You are greater still for me").

“இறைவன் வரும் தருணம், அருள் வரும் தருணத்திற்கு நான் காத்திருக்கிறேன்”.

("I await the *HOUR* of Grace").



✡ **படிப்பு சர்க்கார் வேலைக்குத் தேவை.**
**முதல் மந்திரியாவதற்குப் படிப்புத் தேவையில்லை.**

ஒரு காரியத்திற்குப் பெரிய தகுதி வேண்டும்.

அதே காரியத்தை விடப் பெரியதை அத்தகுதியின்றிச் சாதிக்கலாம்.

சாஸ்திரியாகப் பிராம்மணனாக இருக்க வேண்டும்.

ரிஷியாக எவரும் மாறலாம்.

நாட்டாண்மைக்காரனாக, நாட்டாண்மை வீட்டில் பிறக்க வேண்டும்.

எவரும் MLA ஆகலாம். நாட்டாண்மை MLAக்கு உட்பட்டவன்.

பேராசிரியராக (Professor) M.A., Ph.D. படிக்க வேண்டும்.

மேதை (Genius) ஆக படிப்பு வேண்டாம். படிப்பு தடையாகும்.

அதே போல் - இந்த இலட்சியத்திற்கு இத்தனை கட்டுப்பாடு (discipline) தேவை.

இதே இலட்சியத்தை, இதைவிடப் பெரிய இலட்சியத்தை எட்ட எந்தக் கட்டுப்பாடும் (discipline) தேவையில்லை. உண்மையின் உருவம் ஒன்று போதும்.

உண்மை உயரும் வகை ஏராளம்.

1) பொய் சொல்ல முடியாதது.
2) விஸ்வாசம்.
3) உழைப்பின் சிறப்பு.

   தெளிவான மனம் திறமையாக வெளிப்படும்பொழுது அனைவரும் ஆச்சரியப்படுவர்.

   சத்தியம், நல்லெண்ணத்திற்கு அத்தகுதியுண்டு.
4) எதிரியும் ஏற்கும் (Good will) நல்லெண்ணம்.
5) உலகம் வியக்கும் உதார குணம்.
6) ஒரு துறையில் உச்சகட்ட சிறப்பின் உயர்வு.

   சங்கீதம், (athletics, pleasant behaviour, hospitability, etc.) விளையாட்டு, இனிமையான பழக்கம்,

விருந்தோம்பல்.

7) வேலை எதுவானாலும் கண்ணில் ஒத்திக்கொள்ளும்படி செய்வது.

8) (Responsibility) பொறுப்பு.

9) (Thoughtfulness) - முன்கூட்டி யோசனை செய்து தயாராக இருப்பது.

10) (Resourcefulness) - எவரும் முடியாது என்பதை ஒருவர் செய்வது. 17 யானையை 1/2, 1/3, 1/9 ஆகப் பிரிக்க 18ஆம் யானையைச் சேர்த்து 9, 6, 2 எனப் பிரித்தது.

11) காரியம் சிறியதானாலும் உலகை ஓரிடத்தில் தாண்ட வேண்டும்.

12) லதா மங்கேஷ்கர் சினிமா டைரக்டர் கண்ணில் பட்டது போல, சர். எஸ்.இராதாகிருஷ்ணன், அஷ்டோஷ் முகர்ஜி கண்ணில் பட்டது அதிர்ஷ்டம். ரகுநாத ரெட்டி பேசுவதைக் கேட்ட இந்திரா அவரை மந்திரியாக்கினார். அன்னை சூழல் எவருக்கும் அந்த வாய்ப்பைத் தரும். அன்பர்கட்கு வந்ததெல்லாம் அப்படியே.

சைனாப் பெண் டாங் அது போன்ற சந்தர்ப்பம் - அதை சரிவர அவர் தெரிந்து கொள்ளவில்லை.

*தொடரும்....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நம்முடைய பலனுக்காக, தவறான முறையில் ஒருவரை ஆதரிப்பது பாரபட்சமாகும்.

***ஆசைக்கான ஆதரவு பாரபட்சமாகும்.***





**ஜடத்திற்கு நம்பிக்கையில்லை. ஜடத்தில் பிராணன் நுழைந்ததால் ஏற்பட்ட விபரீதமிது.**

- ஜடம் மட்டும் உலகிலுள்ள வரை ஆட்சி செலுத்தியது.
- ஜடம் எவருக்கும் உட்பட்டதில்லை.
- பிராணன் ஏற்பட்டபின் ஜடத்திற்குச் சுதந்திரமில்லை. பிராணனுக்கு ஜடம் உட்பட வேண்டியதாயிற்று.
- மனம் வளர்ந்தபின், மனம் ஜடத்தை அலட்சியம் செய்து, கொடுமைப்படுத்தியது.
- அதனால் ஜடம் இன்று கொடுமையை நியாயம் எனக் கருதும் நிலைக்கு வந்துவிட்டது.
- நந்தனார் தரிசனத்திற்கு அனுமதி கேட்டபொழுது 70 ஏக்கர் நிலத்தில் நடவு நட்டுவிட்டுப் போ என்றார் அய்யர். நந்தனுக்கு அது அநியாயமாகத் தோன்றவில்லை. எப்படி நடுவது என நினைத்தார். சிவபெருமான் நடவைப் பூர்த்தி செய்தார். சிதம்பரம் கோவிலுள் நுழைய தீக்குளிக்கச் சொன்னார்கள். அதையும் நந்தன் இயல்பாக ஏற்றான். சுதந்திரம் வரும்வரை தொழிலாளி முதலாளியின் கொடுமையை இயல்பாக ஏற்றான். பெண்ணைக் கணவன் ஒதுக்கி வைத்தால், எப்படியாவது அவளை மீண்டும் அவனிடம் சேர்க்க முயல்வார்கள். தன் தலைவிதியென பெண் நினைப்பாள். அவள் நிலைமையை ஏற்பாள். இன்றும் அமெரிக்கா மற்ற நாடுகளை அணுகுண்டு தயார் செய்யக்கூடாது என்பதை அநியாயம் என்று பேசுவதைவிட ஏற்பவர் அதிகம்.

✰ ***கொடுமையை இயல்பாக ஏற்பது ஜடம் மனத்திற்குப் பணிந்த மனநிலை.***

✧ வலியவன் எளியவனை அதிகாரம் செய்வது இன்று குறைவு. என்றாலும் இயல்பாக ஏற்கும் மனநிலை பரவலாக உலகெங்கும் உள்ளது.

✧ என் மனைவியை நான் அடிக்க எனக்குரிமையுண்டு எனப் பேசிய காலம் உண்டு. அதை மனைவி யதார்த்தமாக ஏற்ற நாட்கள் உண்டு.

✧ பதவியிலுள்ளவன் அதிகாரம் செய்ய, கொடுமை செய்ய உரிமையுள்ளவன் என்ற நிலை கிராமத்தில் நாட்டாண்மை-யிடமும், குடும்பத்தில் தலைவரிடமும், கட்சியில் தலைவரிடமும் தொண்டர்கட்குள்ளது.

✧ இது பரிதாபம். ஆனால் நடைமுறை.

✧ வீதிகளைச் சுத்தமாக வைக்க முயல்வதில்லை.

புதுவைக்கு வந்த பிரெஞ்சுப் பெண்மணி வீதிகள் மலஜலம் கழிக்குமிடமாக உள்ளன எனக் கூறினார்.

பூமியைச் சுத்தமாக நாம் வைப்பதில்லை. பூமி நம்மைக் கடிந்து கொள்வதில்லை.

✧ ஸ்ரீ அரவிந்தர் கண் ஆஸ்பத்திரி வெகுசுத்தமான இடம்.

நீலகிரி என்ற கடை சுத்தமாக உள்ளது என்ற புதிய நிலை ஏற்படுகிறது.

கேரளாவில் வீதிகளில் எவரும் அசுத்தம் செய்வதில்லை.

இவை நாம் ஜடத்திற்குத் தரும் மரியாதை.

சாப்பாட்டுப் பாத்திரங்களை உடனே சுத்தம் செய்வதை ஜடமான பாத்திரம் பாராட்டும் என்பது ஆன்மீக உண்மை.

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**சாதகனின் உச்சகட்டம் அன்னை.**



# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## 43. நம்பிக்கை பகுத்தறிவாவது

திருஞான சம்பந்தருக்குப் பார்வதி பாலூட்டினாள் எனில் அது தெய்வாம்சமுள்ள குழந்தை. 1930இல் காங்கிரஸ் தலைவர்கள் படத்தில் இளைஞன் நேருவைக் கண்டு அன்னை அவருள் சைத்தியப் புருஷனைக் கண்டார். இவரே நாட்டின் எதிர்காலத் தலைவன் என்றார். பரமாச்சாரியார் - சங்கராச்சாரியார், சந்திரசேகரர் - பள்ளியில் படிக்கும்பொழுது அப்பொழுது பீடத்திலிருந்த சங்கராச்சாரியார் அவரைக் கண்டு, பாதத்தைச் சோதித்தார். சக்கரமிருந்தது. "இவரே என் வாரிசு" என்றார்.

இராஜாஜியைக் காந்திஜி அது போல் தன் வாரிசு என்றார். **விளையும் பயிர் முளையிலேயே தெரியும்**.

நம்பிக்கை எழுவது அரிது.

பகுத்தறிவு இருப்பதும் அரிது.

இவை எதிரானவை.

ஆஸ்திகனும், நாத்திகனும் போல.

நம்பிக்கையும் பகுத்தறிவும் இணைவது, நாத்திகன் பக்தனாவது போல.

நம்பிக்கை ஆத்ம ஞானம்.

பகுத்தறிவு அறிவு பெற்ற தெளிவு.

அன்பரில் ஒன்று வளர்ந்து அடுத்ததாகும்.

ஸ்ரீ அரவிந்தம் முரண்பாட்டை அனுமதிக்காது.

முரண்பாட்டில் உடன்பாட்டைக் காண்பது தத்துவம்.

**ஒருவருக்கு இந்த அனுபவம் ஏற்பட்டால் அது யோகம் பலிக்கும் அறிகுறி**.

இது எப்படி நடக்கிறது?

நம்பிக்கை ஆத்மா பெற்ற ஞானம்.

பகுத்தறிவு தெளிவு பெற்ற அறிவு, மனத்திற்குரியது.

மனத்தின் மூலம் ஆத்மா.

தெளிவு மூலம் மனம் ஆத்மாவை அடைவதால் நம்பிக்கையாக மாறுகிறது.

கோடையில் கிணறுகள் வறண்ட நேரம் பிரார்த்தனையால் 3 கிணறுகளில் 20 அடி நீர் சுரப்பது நம்பிக்கை. அதைப் பகுத்தறிவால் விளக்க முடியுமா? 40 ஆண்டுகட்கு முன் சரக்கு சப்ளை செய்த வியாபாரியிடம் 25,000 அட்வான்ஸ் தங்கியபின் அதை அவர் தர மறுக்கும்பொழுது நம்பிக்கை நிலைக்குமா? ஒரு வருஷம் கழித்து அவரே வந்து பாக்கியைத் தர முன்வந்து வட்டி மட்டும் கேட்காதீர்கள் என்று கணக்கு தீர்த்தார். இது எப்படி நடந்தது? அவருடைய தொழிலில் சரக்கு கடன் கொடுத்தே வியாபாரம் செய்ய வேண்டும். அது நிலுவையாவது வழக்கம். வசூலாகாது. இந்த ஆண்டு பண வசதியால் அவர் ரொக்கத்திற்கு விற்றார். அதனால் பழைய பாக்கியை வசூல் செய்தார். இரண்டு லாரி வாங்கினார். வளமாகிவிட்டார். அவர் மகன் அன்பனாகிவிட்டான். தகப்பனாரைக் கண்டிக்கும் உறவு இல்லை. சில வருஷம் சென்று வியாபாரி மகனால் மனம் மாறினார். அன்பர் நம்பிக்கை பலித்தது. இது எப்படி பகுத்தறிவாகும்?

வியாபாரிக்கு 17 வருஷ நிலுவை அன்பரால் வசூலானதால், அன்பர் பணம் வசூலாகும் என்பது அறிவு.

**அறிவு அன்பருக்குப் பகுத்தறிவாகும்**.

அன்னை பணம் வியாபாரிக்கு நல்லதே செய்யும்.

நல்லது செய்த பணத்தை ஏமாற்ற முடியாது என்பது பகுத்தறிவு.

அன்னை மீதுள்ள நம்பிக்கை விஷய ஞானத்தால் பகுத்தறிவாகி, இரண்டும் இணைவது உயர்ந்த மனநிலை.

*தொடரும்.....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**மனம் அன்னையை நாடினால் உலகம் முழுவதும் உன்னை நாடும்.**

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒவ்வொரு நிலையும் (plane) அடுத்த நிலையை உற்பத்தி செய்கிறது. கடைசி நிலையை (true physical) சூட்சுமமான உண்மை ஜடம் என்கிறார்.

(e.g.) ஜடமான ஸ்தூல உடலுக்குச் சூட்சும சரீரம் உண்டு. ஒவ்வொரு நிலைக்கும் சூட்சும நிலையுண்டு. ஜடம் உயர்ந்து பிராணன், மனம், ஆன்மா உண்டாகின்றன. உடல் முதலில் பிராணனாலும், பின்னர் புத்தியாலும் ஆளப்படுகிறது. அடுத்த நிலையில் ஆன்மாவில் ஆளப்படுவதை உண்மையான ஸ்தூல உடல் என்கிறார். அதற்கும் சூட்சுமப் பகுதியுண்டு. அதுவே (true physical) உண்மையான சூட்சும ஜடம். இதுவும் சூட்சுமம் உடையதென்றாலும் இதன் சூட்சுமம் உயர்ந்தது.

***உடலின் சைத்திய புருஷனின் சூட்சுமம் (true physical) உண்மையான உடலாகும்.***

# அன்னையின் முத்திரை

இல. சுந்தரி

''நித்யா, ஈமெயில் செக் பண்ண வேண்டும், லைப்ரரியில் புக் எடுக்க வேண்டும் என்று எங்காவது போய்விடாதே. இன்று, நீ வீட்டிலிருக்க வேண்டும்'' என்றாள் கீதா.

''நம் வீட்டில் இன்று என்னம்மா விசேஷம்?'' என்கிறாள் நித்யா.

''லீலா ஆண்டி, உன்னைப் பெண் பார்க்க அந்த ஆடிட்டர் அகத்து மாமியை அழைத்து வரப் போவதாய் போன் செய்தாள். அதனால்தான் சொல்கிறேன், எங்கும் போய்விடாதே'' என்றாள் அம்மா.

''வேடிக்கைதானம்மா, இந்தச் சாக்கில், டிபன், காபி தயாரிப்பதில் எக்ஸ்பர்ட் ஆகிவிடுவேன்'' என்று கிண்டல் செய்தாள் நித்யா.

''இதெல்லாம் பரம்பரையாக உள்ள பழக்கம். நாம் என்ன செய்ய? இந்த வரனாவது கூடி வந்தால் அதுவே போதும் எனக்கு'' என்கிறாள் கீதா.

''சாயந்தரம் ஆறு மணிக்கு வரப்போகின்றவர்களுக்காக குழந்தையை இப்போதே ஏன் தடுத்து நிறுத்துகிறாய்?'' என்று கேட்ட வண்ணம் வந்தாள் இவள் பாட்டி, கீதாவின் தாய்.

''இதெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை பாட்டி. ஆனால் அம்மாவுக்காக நான் இதை ஏற்றுக் கொள்கிறேன்'' என்றாள் நித்யா.

இதுவரை பார்த்த வரன்கள் ஜாதகப் பொருத்தம் இல்லை என்றாயிற்று. பொருத்தம் உள்ள வரன்களும் வரதட்சணை பற்றாக்குறையால் போய்விட்டனர்.

இப்பொழுது ஜாதகப் பொருத்தம் பார்க்காமல் வரதட்சணை எதிர்பார்ப்பு ஏதுமின்றி, இவர்கள் தூரத்து உறவினளான லீலா ஆண்ட்டி நித்யாவைப் பற்றிக் கூறிய நல்லபிப்ராயங்களால்



விருப்பப்பட்டு பெண் பார்த்து நிச்சயம் செய்ய வருகின்றனர். பையன் பெரும்படிப்புப் படித்தவன். சாந்த சொரூபி. செல்வக் குடும்பத்து ஒரே பிள்ளை. இந்த வரன் அமைந்தால் நித்யா அதிர்ஷ்டசாலிதான்.

சில தினங்களுக்கு முன் இங்கு வந்த லீலா, நித்யாவின் திருமணம் பற்றி இவர்கள் கவலைப்படுவதைப் பார்த்து, நித்யாவின் அறிவு, அழகு, அடக்கம் இவற்றையும் பார்த்து, இவர்களுக்கு நல்ல வரன் பார்த்துத் தர வேண்டும் என்று நினைத்தாள். தனக்கொரு ஆண்மகன் இருந்திருந்தால் நிச்சயம் நித்யாவை மருமகளாய் ஏற்றிருப்பாள். அந்த அளவு நித்யாவை அவள் நேசித்ததால் தனக்குத் தெரிந்த பெரிய இடத்தில் இவளைப் பற்றிப் பேசி இந்தப் பெண் பார்க்கும் நிகழ்ச்சியையும் ஏற்பாடு செய்துவிட்டு கீதாவிற்குப் போன் செய்து தெரிவித்திருந்தாள்.

பிள்ளை வீட்டார் வர இன்னும் நேரம் இருக்கும் இந்த இடைவெளியில் நித்யாவின் பெற்றோர் பற்றித் தெரிந்து கொள்வோம்.

நித்யாவின் தாய் கீதா தன் இளம் வயதில் வேற்று சாதி ஆண்மகனைக் காதலித்தாள். ஆனால் அவள் பெற்றோர் அதை ஏற்கவில்லை. அவள் விரும்பிய ஆண்மகனுக்கு அப்பா மட்டுமே. வேறு உறவுகள் இல்லை. தானே தாயாயிருந்து வளர்த்த மகனின் விருப்பத்தை ஏற்று கீதாவைத் தன் மகனுக்கு மணம் செய்வித்து அழைத்துப் போய்விட்டார். இவள் கலப்புத் திருமணத்தால் மனமுடைந்து இவள் தந்தை காலமாகிவிட்டார்.

கீதாவிற்கு நித்யா பிறந்து இரண்டே ஆண்டுகளில் கீதாவின் கணவன் விபத்தில் இறந்துவிட்டான். குழந்தையுடன் கீதா தன் அம்மா வீட்டிற்கு வந்துவிட்டாள். இவள் தாய், பாசத்தாலும், நித்யாவின் கள்ளமில்லா குழந்தைப் பருவத்தால் கவரப்பட்டும் கீதாவை ஏற்றுக்கொண்டுவிட்டாள். அத்துடன் மாமனார் தொடர்பே விட்டுப்போயிற்று.

நித்யா பாட்டியின் வளர்ப்பில் உருவானாள். நன்றாகப் படித்தாள். கம்ப்யூட்டர் சயின்ஸ் முடித்து மேற்படிப்புக்கு அமெரிக்கக் கல்லூரி ஒன்றிற்கு விண்ணப்பித்திருந்தாள்.

நித்யாவையாவது தன் ஜாதியில் திருமணம் செய்து வைத்து

விடப் பாட்டிக்கு ஆசை. அதன் விளைவுதான் இன்றைய பெண் பார்க்கும் படலம்.

பிள்ளை வீட்டார் வந்தனர். பெண்ணை மிகவும் பிடித்துவிட்டது. நித்யாவை அருகில் உட்கார வைத்து அவள் படிப்பு, மற்ற ஆர்வங்கள் யாவற்றையும் விசாரித்த பிள்ளையின் அம்மா நித்யாவை மிகவும் பாராட்டினாள். அவள் பேசிய விதம் அவளுக்குப் பெண்ணை மிகவும் பிடித்துவிட்டதை உணர்த்தியது.

'இவள்தான் என் பையனுக்கு ஏற்ற பெண். நல்ல அழகு, அறிவு, அடக்கம், இப்படி ஒரு பெண்ணுக்குத்தான் காத்திருந்தேன் போலும்' என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டாள் பிள்ளையின் தாய்.

இந்த வரனைக் கொண்டு வந்த லீலாவோ, 'இப்படி அறிவும், அழகும், அடக்கமும் கொண்ட இவளைப் பிடிக்காமல் போகுமா என்ன?' என்று எண்ணினாள்.

ஆனால் இறை நியதி வேறுவிதமாய் உள்ளது போலும்.

மேற்கொண்டு பேச எண்ணியபோது யாரும் எதிர்பாராத விதமாய் நீண்ட காலமாய்த் தொடர்பு விட்டுப்போன கீதாவின் மாமனார் வந்தார். நித்யாவின் பாட்டிக்கு முகம் மாறிவிட்டது.

அவர் மிகவும் நல்லவர். தன் கணவரின் மரணத்திற்குப் பின் ஏதோ இயலாமையால் தாய் வீட்டிற்கு வந்துவிட்டாளே தவிர, கீதாவிற்குத் தன் மாமனாரைப் பற்றிய இரக்கவுணர்வு உள்ளூர இருந்தது. ஒரு நல்ல மருமகளாய் இந்த வயதான காலத்தில் அவருக்குத் தொண்டு செய்து, அவருடன் இல்லாமல் தான் வந்தது தவறு என்ற குற்றவுணர்வும் இருந்தது. தன் அம்மாவிற்காக அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருந்தாள்.

ஆனால் இன்று பாசத்துடன் 'கீதா' என்று அழைத்துக் கொண்டு வந்த அவரை கீதாவால் புறக்கணிக்க முடியவில்லை.

''வாங்க மாமா. எப்படியிருக்கீங்க?'' என்று அன்புடன் வரவேற்றாள்.

''எனக்கென்னம்மா, நான் நல்லாயிருக்கேன். வீட்ல என்ன விசேஷம்?'' என்று பிள்ளை வீட்டாரை கவனித்தவண்ணம் கேட்டார்.



பெண் பார்க்க வந்தவர்களும் இவர்களை வித்யாசமாய்ப் பார்த்தனர்.

''நம்ம நித்யாவிற்குக் கல்யாணம் பேச வந்திருக்காங்க'' என்று மகிழ்ச்சியுடன் கூறினாள்.

''நல்ல நேரத்துலதான் நான் வந்திருக்கேன். இந்தா உம் புருஷனுடைய சொத்துப் பத்திரம், உன் மாமியார் நகைகள். எம் பேத்தி கல்யாணத்தை நல்லா நடத்து. நானும் கண்குளிரப் பார்க்கணும்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டுவிட்டார்.

இந்தச் சில கணங்களில் வீட்டின் சூழலே மாறிவிட்டது.

'யாரிவர்? ஏதோ வேற்று ஜாதி மனிதர் போலிருக்கிறார். பெண்ணை எம் பேத்தி என்கிறார். கீதா அவரை மாமா என்கிறாள்' என்று சந்தேகம் வந்துவிடவே, பிறகு தம் முடிவைச் சொல்லி-யனுப்புவதாய்க் கூறிச் சென்றுவிட்டனர் பிள்ளைவீட்டார்.

பாட்டி புலம்ப ஆரம்பித்துவிட்டாள். ''இப்போ இந்த மனுஷர் வரலைன்னு யார் அழுதா? எம் பொண்ணுதான் வாழலை. பேத்தி வாழ்வையும் வீணாக்கிவிட்டுப் போய்விட்டார். எத்தனை ஆசையாய் பிள்ளையின் அம்மா நித்யாவிடம் பேசினாள். இந்த மனுஷரைப் பார்த்ததும் முகமே மாறிவிட்டது. வந்தது யார் என்று கேட்டால், யாரென்று சொல்வது?''

''அம்மா, இவர்களுக்காக அவரைத் துரத்தச் சொல்கிறாயா? அவர் பாவம்மா. எனக்குக் கணவர் இல்லை என்றால், இந்த வயதான காலத்தில் அவருக்கு ஆதரவு தர வேண்டிய அன்பு மகன் இல்லையம்மா. எனக்காவது நீயிருக்கிறாய். அவருக்கு யாரிருக்-கிறார்கள்?'' என்று கீதா கூற, பாட்டிக்கு அவள் பேச்சு பிடிக்காமல் திரும்பிக் கொண்டாள்.

நித்யாவிற்குத் 'தன்னால்தானே இத்தனை பிரச்சினைகளும்' என்று மனவேதனை உண்டாயிற்று.

கீதாவின் கணவர் இறந்துவிட்டார் என்றும், அதன் பிறகு அவள் தாய் வீட்டில் இருப்பதாக மட்டுமே கூறியிருந்தார்களே தவிர, கீதா கலப்புத் திருமணம் செய்தவள் என்பதைச் சொல்லவில்லை.

பிள்ளை வீட்டார் அப்போது அமைதியாய்ச் சென்றுவிட்டாலும்,

பிறகு இந்த வரனை ஏற்பாடு செய்த லீலாவை அழைத்து கடிந்து கொண்டனர். ‘‘நீ ஏன் அந்தப் பெண் வேற்று ஜாதிக்காரனுக்குப் பிறந்த பெண் என்ற உண்மையைச் சொல்லவில்லை? நம் ஜாதி என்று நினைத்ததால்தான் ஜாதகம் பார்க்காமல், வரதட்சணைக் கேட்காமல் பெண் பார்க்க வந்தோம். அன்று கீதாவின் மாமனார் என்றொருவர் வந்து நித்யாவை எம் பேத்தி என்ற பிறகல்லவா விஷயம் தெரிந்தது. எங்களுக்கு ஒரே பிள்ளை. நான் குல வழக்கங்களை மதிப்பவள். கர்ம காரியங்கள் செய்யும் போது வேற்று ஜாதி கலப்பில் பிறந்த பெண் அதில் பங்கேற்பதை என் மனம் அனுமதிக்காது. அவள் அழகையும், அறிவையும் தாண்டி என் மனம் ஜாதி பேதம் பார்க்கும்’’ என்று பிள்ளையின் தாய் நித்யாவை ஒரேயடியாய் நிராகரித்துவிட்டாள்.

லீலா வருந்தினாள். நேர்ந்துவிட்ட நிலைக்குக் கீதாவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள். ‘‘இவ்வளவு நல்ல பெண்ணை மருமகளாய்க் கொள்ள எனக்கொரு பிள்ளையில்லையே. விடு கீதா, உலகம் பரந்தது. இது போனால் என்ன? வேறு நல்ல வரன் அமையும்’’ என்று கூறிச் சென்றாள்.

நித்யாவிற்குச் சற்று ஏமாற்றம் என்றாலும் அதைப் பெரிதுபடுத்தாமல் வேறு வேலையில் கவனம் செலுத்த எண்ணினாள்.

மறுநாள் இவள் தோழி பானு வந்தாள். ‘‘நித்யா, நேற்று என்ன ரிசல்ட்? மாப்பிள்ளை ஓகே(ok)யா?’’ என்றாள்.

‘‘பெண்தான் okயில்லை’’ என்று சிரித்துக் கொண்டே கூறினாள் நித்யா.

‘‘என்ன சொல்கிறாய் நீ? லீலா ஆண்ட்டி அத்தனை ஆசையாய்க் கூறினார்களே’’ என்றாள் பானு.

‘‘ஆமாம், ஆண்ட்டிக்கு ஆசைதான். வந்தவர்களுக்கும் என்னைப் பிடித்துவிட்டது. ஆனால் வேறு விஷயம் நடந்துவிட்டது’’ என்று நடந்தவற்றை விளக்கமாய்க் கூறினாள்.

‘‘என்னைப் பொருத்தவரை இது நின்றது நல்லதுதான்’’ என்றாள் நித்யா.

‘‘ஏன் அப்படி நினைக்கிறாய்?’’ என்கிறாள் பானு.

‘‘ஆமாம், இன்று என் தாத்தாவைப் பார்த்துவிட்டு என்னை



வேண்டாம் என்றவர்கள், அது தெரியாமல் என்னை ஏற்றிருந்தால், திருமணத்திற்குப் பின் இந்த உண்மை தெரிய வந்தால் என்னைப் பிறந்த வீட்டிற்கல்லவா அனுப்பியிருப்பார்கள்’’ என்றாள் நித்யா.

‘‘சரி நித்யா, இன்றுதான் நானுனக்கு அன்னையை அறிமுகப்படுத்த வேண்டிய தருணம் வந்திருக்கிறது. வா என்னுடன். தியான மையத்திற்குப் போவோம்’’ என்று அழைத்துச் சென்றாள்.

அடிக்கடி பானு தியானமையம் போகிறேன் என்ற போதெல்லாம் அது பற்றி அறிய இவளுக்கு ஆவல் இருந்ததில்லை. ஏனென்றால், இவளுக்கு லைப்ரரி சென்று படிப்பது, கம்ப்யூட்டர் சென்டரில் மேற்பார்வையாளராய் குறிப்பிட்ட நேரம் பணி செய்வது என்று அவளுக்குப் பிடித்ததைச் செய்வாள். எனவே, இவர்கள் இருவரும் தத்தம் போக்கில் போய்விடுவது வழக்கம்.

இன்று மனதில் லேசான சோர்வு எட்டிப் பார்த்ததால் ஒரு மாற்றத்திற்காக பானுவுடன் தியானமையம் வந்தாள்.

சூழலே அமைதியும், அழகும், சுத்தமுமாய்க் கவர்ந்திழுத்தது. பலர் வந்து அமைதியாய் அமர்ந்து தியானம் செய்துவிட்டுச் சென்று கொண்டிருந்தனர்.

‘‘நித்யா, வா, சிறிது நேரம் தியானம் செய்வோம். பிறகு விரிவாய் எல்லாம் சொல்கிறேன்’’ என்று பானு கூற, இருவரும் ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரின் திருவுருவங்களின் முன் அமர்ந்து கண்மூடித் தியானித்தனர். அகத்திரையில் ஸ்ரீ அன்னை பகவானின் திருவுருவங்கள் தோன்ற, புதியதொரு ஆனந்த அனுபவம் உள்ளே மொட்டவிழ்கிறது. மிகவும் இதமாய் உணர்ந்தாள் நித்யா. தினமும் இதுபோல் இங்கு வந்து இவர்கள் முன் சிறிது நேரமாவது அமர்ந்து இதை அனுபவிக்க வேண்டும் என்று ஆர்வம் எழுந்தது. சிறிது நேரத்திற்குப் பின் இருவரும் எழுந்து கொண்டனர். அங்கு யாரும் வாய்விட்டுப் பேசவில்லை என்பது முக்கிய விஷயமாயிருந்தது. அசாத்ய அமைதி.

வெளியே வந்ததும் ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் பற்றியும், அவர்கள் யோகம் செய்தது பற்றியும், அதன் விளைவாகச் சத்திய ஜீவியம் புவிக்கு வந்தது பற்றியும் பல சுவையான விஷயங்கள் சொன்னாள் பானு. அது மட்டுமின்றி, ஓரன்னையன்பரின்

எழுத்துகளில் உருவாகி, அன்பர்களின் வாழ்வாக மாறியுள்ள அருளுரைகள் அடங்கிய புத்தகம் ஒன்றையும் படிக்கக் கொடுத்தாள்.

பானு தியானமையச் சேவையுடன் புத்தகச் சேவையும் செய்கிறாள்.

*(இங்குப் புத்தகச் சேவை பற்றிச் சிறிது தெரிந்து கொள்வோம். அன்னையின் வரலாறு, அன்னையின் கோட்பாடுகள் ஒருவருக்கு எட்டச் செய்வது சேவை. அது புத்தகத்தின் மூலமாகவே முடியும். சேவைக்கு முன்வரும் மையமோ, அன்பரோ அன்னை பற்றிய புத்தகங்களை விற்க வேண்டும். இது பணம் ஈட்டுவதற்கான விற்பனையில்லை. எனவே, வற்புறுத்தி விற்கக்கூடாது. அப்புத்தகம் வாங்குபவருக்குப் பலன் தர வேண்டும் என்று தீவிரமாக விழைந்து அதற்கு எதிரொலியாக அவர் புத்தகம் வாங்கினால் அது சேவையாகும்.*

*சேவை செய்ய விரும்பும் அன்பர் புத்தகம் அச்சிட மூலதனம் இடுவது மனத்தால் பொறுப்பேற்பதாகும். சேவை செய்ய விரும்பும் அன்பர் மனம் சேவையில் ஈடுபாடு கொண்டிருப்பது உண்மையானால் மற்றவர் வந்து வாங்குவர். அதுவே உண்மையான சேவை).*

பானு வித்யாவிற்குக் கொடுத்த புத்தகம் ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் பற்றிய குறிப்புரைகளுடன் அவர்கள் சக்தி, மற்றும் கோட்பாடுகளை விளக்குவதாக இருந்தது. அன்னை பகவான் சந்நிதியில் பவித்திரமான உணர்வுடன் பானு அப்புத்தகத்தைக் கொடுக்கப் பணிவுடன் நித்யா பெற்றுக் கொண்டாள்.

''இதற்குப் பணம் நாளை கொண்டு வந்து தருகிறேன் பானு'' என்று நித்யா கூற, ''பொறுமையாகக் கொடு. முதலில் படித்துப் பார். படித்த பிறகு கொடுத்தாலும் பரவாயில்லை. இந்தப் புத்தகச் சேவை எங்கள் ஆதாயம் கருதி செய்யப்படுவதன்று. பெறுபவர் நலன் கருதிச் செய்யப்படுவது'' என்றாள் பானு.

அந்த முதல் புத்தகத்திலேயே, புரட்சிகரமான அந்த ஆன்மீகச் செம்மல்களை நித்யாவிற்குப் பிடித்துவிட்டது. மேலும், அறிந்து கொள்ளவும் ஆவல் எழுந்தது.

மையத்தில் பல சேவைகள், புத்தகச் சேவை என்று பானு எத்தனை புனிதப் பணிகளை அடக்கமாகச் செய்கிறாள். இதுநாள் வரை அவளிடம் இது பற்றியெல்லாம் தெரிந்து கொள்ளாதது எவ்வளவு பெரிய குறை என்று எண்ணமிட்டாள். நேற்றைய நிகழ்ச்சி மறந்து போனது. அன்னை பகவானின் புனிதத்தில் மறந்து



கரைந்தாள். அதன் பிறகு வீட்டிலும் பெண் பார்க்க எந்த ஏற்பாடும் நிகழவில்லை.

கீதாவும், அவள் தாயும் மனம் சோர்ந்து போயினர். நித்யாவின் எதிர்காலம் பற்றிய கவலை அவர்களைத் துன்புறுத்தியது. ஆனால் நித்யாவோ முன்பைவிட இப்போதுதான் உற்சாகமாயிருக்கிறாள். தவறாமல் தியானமையம் போகிறாள். பானுவிடம் அடிக்கடி புத்தகம் வாங்குகிறாள். அப்புத்தகத்தில் படித்தது பற்றி அவளுடன் நீண்ட நேரம் உரையாடுகிறாள்.

''நித்யா, நான் உன் எதிர்காலம் குறித்து, உன் திருமணம் குறித்துக் கலங்கிப் போயிருக்கிறேன். வயதான என் அம்மா உயிருடனிருக்கும்போதே அவர் விருப்பப்படி உன் திருமணம் நடந்துவிட்டால் அவர் மனம் அமைதியடையும்'' என்று தன் மனநிலையைக் கூறினாள் கீதா.

நித்யா இயல்பாகவே வித்யாசமான பெண்.

இப்போது அன்னை ஸ்ரீ அரவிந்தர் கோட்பாடுகளைப் படிக்க ஆரம்பித்த பிறகு மிகவும் திடமாகிவிட்டாள். அன்னை இருக்கும் போது கவலை எதற்கு என்ற நம்பிக்கை வந்துவிட்டதால், அம்மாவிற்கு அவள் சமாதானம் கூறினாள்.

''அம்மா, நீ ஏன் வீணே கலங்குகிறாய்? இந்தச் சாதி, சடங்கு, சம்பிரதாயம் யாவும் வெறும் புறத்தோற்றமே. ஜீவனற்ற இவற்றைப் பற்றிக் கொண்டு நம்மை நாமே வருத்திக் கொள்ளும் அறியாமையை நினைத்து எனக்கு வேடிக்கையாயிருக்கிறது. நீ கவலைப்படாதே. எல்லாம் நல்லதே நடக்கும். நான் தியானமையம் சென்று வந்து விடுகிறேன்'' என்று புறப்படத் தயாரானாள்.

''ஆமாம் நித்யா, நானே கேட்க நினைத்தேன். இப்போதெல்லாம் தியானமையம் போவதாய்ச் சொல்கிறாயே, அது பற்றி நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்றாள் கீதா.

''ஓ, அதுவா? ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் என்ற இரு வடிவ கடவுளர்கள் 100 ஆண்டுகளுக்கு முன் தோன்றி, பூரணயோகம் என ஒரு யோகத்தைச் செய்திருக்கிறார்கள். அதன் பலன் பூமிக்கே உரியது. இது சாமானியர்களுக்குப் புரிவது கடினம். மனிதனில் இறைவனே வந்து செய்யும் யோகமாம். நம்மால் இந்த யோகத்தை

மேற்கொள்ள முடியாது என்றாலும், பகவானும் அன்னையும் செய்த யோகப் பலனாகிய யோக சக்தியை நாம் பெற முடியும். அதற்கு நாம் நேர்மை, திறமை, உழைப்பு, கடமை என்ற வாழ்வு முறைகளில் ஒன்றை முழுமையாகச் செய்தாலும் அதன் வாயிலாக இந்தச் சக்தி நம் வாழ்வினுள் வந்து செயல்படும்.

யோக சக்தியை நம் வாழ்வில் நாமும் பெற்றுப் பயன் பெறும் வண்ணம் அதற்கான நெறிமுறைகளை நடைமுறையோடு பொருத்தி யோக வாழ்க்கை என அன்னையின் ஆசி பெற்ற ஒரு சான்றோர் எழுதுகிறார். அதைத் தம் வாழ்வில் ஏற்றுப் பயன் பெற்ற அன்பர்களும் தத்தம் அனுபவங்களை எழுதியுள்ளனர். இவற்றை தியானமையம் என்ற அமைப்பின் மூலம் நாமும் பெறலாம்.

ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரின் சாந்நித்யம் பொலியும் தியானமையம் சென்று அவர்கள் முன்னமர்ந்து தியானம் செய்யும் போது ஏற்படும் அமைதி, ஆனந்தத்தின் முன் துன்பமாவது ஒன்றாவது. நீயும், பாட்டியும் இதன் அருமையுணர்ந்து தியானமையம் வரத் தொடங்கிவிட்டால் நம் வீடே ஆனந்தமயமாகிவிடும்'' என்றாள் நித்யா.

''என்ன நித்யா இது புதுக்கதை? உனக்குத் திருமணம் கூடி வரவில்லை என்று சந்நியாச வாழ்வைத் தேடிப் போகிறாயா?'' என்று திடுக்கிட்டாள் கீதா.

''சந்நியாசமா? அது யாருக்கு வேண்டும்? அன்னைக்குத் துறவு வாழ்வு உடன்பாடில்லையம்மா. ''துறவிகள் வகுத்த வழி தனிமை, செயலற்றிருத்தல். அவசேதனம் பதிவு செய்தலுக்கு எவ்வித வாய்ப்பும் தாராது தடுக்க துறவிகள் இம்முறைகளைக் கையாளுகிறார்கள். இவை எனக்குப் பயனற்றவையாகத் தோன்றுகின்றன'' என்று ஸ்ரீ அன்னையே கூறியிருக்கிறார்கள். வாழ்வைத் துறக்கும் சந்நியாசம் இல்லையம்மா இது. இல்லறத்தைத் தூய துறவற நெறியால் சிறப்பிக்கும் வாழ்க்கையிது'' என்றாள் நித்யா.

''என்ன நித்யா மேலும், மேலும் புதிர் போடுகிறாய்? இல்லறமும், துறவறமும் ஒன்றிற்கொன்று மாறுபட்டது என்பது தெரியாதா? துறவியாய் வாழ இல்லறத்தை ஏற்றால் கேலி செய்யமாட்டார்களா?'' என்றாள் அம்மா.



''அம்மா, நீ தப்புத்தப்பாய்ப் புரிந்து கொள்கிறாய். இல்லறத்தைத் துறவறமாய் வாழ்வது என்றால், துறவி தன் வாழ்விற்கு இறைவனை மட்டுமே நம்பியிருப்பது போல, சமூகத்தை நம்பி வாழும் நாமும் இறைவனையே நம்பி இல்வாழ்வை நடத்துவது என்று பொருள்'' என்று விளக்கம் கூறினாள் நித்யா.

''இல்லறமே கூடி வரவில்லை. அதன் பிறகல்லவா கடவுளையே நம்பி வாழ வேண்டும்''.

''இல்லறம் கூடி வரவும் இறைவனையே நம்ப வேண்டும் என்று தோன்றவில்லையா உனக்கு?'' என்கிறாள் நித்யா.

''இதுவரை உன் திருமணம் நல்ல முறையில் கூடிவர இறைவனைப் பிரார்த்திக்காமலா இருந்தோம்?''

''ஆமாம், நாம் இதுவரை பிரார்த்தித்தது மன தளத்தைச் சேர்ந்த கடவுளர்களை. நம் பிரார்த்தனையை ஏற்று, பலன் தர வேண்டிய கடமை அவர்களுக்கு இல்லை. ஆனால் அன்னை நம்மைத் தேடி வரும் தெய்வம். தோல்வியறியாத சத்தியஜீவியத்திற்குரியவர் என்றெல்லாம் படித்தேன். எது வாழ்வில் முடியாதோ அது அன்னையிடம் முடியும் என்று நிறையப் படித்திருக்கிறேன். நான் அன்னையை நம்புகிறேன். அன்னையே என் திருமணத்தைச் சிறப்பாக நடத்தித் தருவார். இதெல்லாம் விடு. நான் இந்த மாதம் முதல் ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரின் யோக மலரான மலர்ந்த ஜீவியம் வரவழைக்கப் போகிறேன். படித்தால் புரியும். நீயும் சந்தோஷமாய் மாறிவிடுவாய்'' என்று கூறிப் புறப்பட்டுவிட்டாள்.

''ஏதோ புத்தகம் சொன்னாயே, அதை வாங்கி வா'' என்றாள் அம்மா. ''சரிம்மா'' என்று கூறிச் சென்றாள்.

கம்ப்யூட்டர் சயின்ஸில் நிறைய மார்க்குகள் எடுத்திருந்தாள் நித்யா. அமெரிக்கா சென்று மேற்படிப்பைத் தொடர ஆசைப்பட்டு அமெரிக்கக் கல்லூரி ஒன்றிற்கு விண்ணப்பித்திருந்தாள். மேற்படிப்பிற்கு அனுப்ப தங்களுக்குச் சக்தியில்லை என்று அம்மாவும் பாட்டியும் கூறியும் கேளாமல் தன் மார்க்கிற்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கும் என்று எண்ணி விண்ணப்பித்திருந்தாள். ஆனால் இவள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட செய்தி வந்துவிட்டது.

இப்பொழுதுதான் கல்யாணப் பிரச்சினையை மறந்து

நிம்மதியாய் மாறினாள். ஆனால் இப்போது மேற்படிப்பிற்கு வாய்ப்பில்லை. அமெரிக்கப் பயணம் ரத்தாகிவிட்டது என்பது பெருத்த ஏமாற்றமானது.

உடனே தியானமையம் சென்று ஸ்ரீ அன்னையிடம் இதைச் சமர்ப்பித்தால் ஆறுதலாகும் என்று, நேரம் காலம் பாராது எரிக்கும் வெயிலில் தியானமையம் வந்தாள்.

அன்னை முன்னமர்ந்து மானசீகமாய்த் தன் ஆர்வம் நிறைவேறாமையைக் கூறினாள். அன்னையின் அந்தக் கண்கள் பேசும் பேச்சு என்னவாயிருக்கும்? எதையும் சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருப்பாரோ!

பானுவுக்கு அன்று மதிய நேர தியானமையச் சேவை. எனவே, உள்ளே வேலையாயிருந்தவள் முடித்துவிட்டு முன்ஹாலுக்கு வந்தவள் தியானம் முடித்து எழுந்த நித்யாவைப் பார்த்தாள். இவளைப் பார்த்தவுடன் நித்யா பானுவை நோக்கி வந்தாள்.

''என்ன நித்யா என்னவோ போலிருக்கிறாய்? இந்த நேரத்தில் இங்கு வந்திருக்கிறாய்?'' என்று பானு கேட்க, ''என் சோகத்தை அன்னையிடம் சொல்ல வந்தேன். நான் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அமெரிக்கக் கல்லூரியில் என் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுவிட்டது. ஏமாற்றமாயிருக்கிறது'' என்றாள் சோகமாய்.

''உன் மார்க்கை, அதாவது உன் திறமையை நம்பியிருந்தாய். இப்போது அன்னையை நம்பு. ஆனால் எதிர்பார்ப்பதை விட்டுவிடு. அன்னையிடம் ஒன்று தவறினால் அதைவிட உயர்ந்தது வரும் என்பது அன்பர்கள் அனுபவம்'' என்றாள் பானு.

மனம் தேறி மலர்ச்சியாகிவிட்டாள் நித்யா. அதே நேரம் விஷால் வந்தான்.

''என்ன விஷால்? இந்த நேரத்தில் வந்திருக்கிறாய்?'' என்றாள் பானு.

''என் அம்மாவிடம் முறையிட இந்த நேரம், அந்த நேரம் உண்டா என்ன?'' என்ற அவன் குரலில் சிறிது ஆத்திரம், அதை அடக்கியாளும் சோகம் இரண்டுமிருந்தது.

பானு சிரித்தாள். ''தாராளமாய் முறையிடு. அதற்கு உனக்குப்



பூரண உரிமையுண்டு. அதே சமயம், அன்னையை ஏற்ற பிறகு ஒன்று தவறினால் அடுத்தது அதைவிடப் பெரியது கிடைக்கும். அன்னை கிள்ளிக் கொடுக்கமாட்டார். அள்ளித்தான் கொடுப்பார் என்பது நிதர்சனம். ஆதாய மனப்பான்மை, எதிர்பார்ப்பு என்பதை விலக்கி, தூய உள்ளத்தோடு செய்கின்ற எச்செயலும் அன்னையை அதிகம் பெற்றுத் தரும்'' என்று கூறிய பானு, ''நித்யா, இவன் விஷால். இவன் அன்னையிடம் வந்த விதம் அவனே சொல்வான். விஷால், இவள் நித்யா. என் தோழி. சமீபகாலமாகத்தான் அன்னையிடம் வந்தாள். நீங்கள் இருவரும் உங்களைப் பரஸ்பரம் அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள். அதற்குள் நானும் சில பணிகளை முடித்துவிட்டு வருகிறேன்'' என்று கூறி, பானு மீண்டும் உள்ளே சென்றுவிட்டாள்.

தியானமையத்தின் காம்பவுண்டுக்குள், தியானம் முடித்தவர்கள் வந்து அமர ஏதுவாய் நீண்ட பெஞ்சு போன்ற கடப்பைக் கல் இருக்கைகள் உண்டு. அதில் வந்து அமர்ந்து மெல்லிய குரலில் இருவரும் தத்தம் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

''ஹாய் நித்யா, ஐ யாம் விஷால். கம்ப்யூட்டர் சயின்ஸ் முடித்திருக்கிறேன். அமெரிக்கக் கல்லூரி ஒன்றிற்கு விண்ணப்பம் செய்திருந்தேன். அது நிராகரிக்கப்பட்டுவிட்டது. அந்தச் சோகம்தான் அன்னையிடம் முறையிட வந்தேன். பானுவின் வார்த்தை என் முறையீட்டை முறித்துவிட்டது'' என்றான் விஷால்.

''அது சரி, நீங்கள் எப்படி அன்னையை அறிந்தீர்கள்?''

''நானெங்கே அறிந்தேன். அவர்களாகவே என்னைத் தனக்கு எடுத்துக் கொண்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்''.

*தொடரும்.....*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**கிராக்கி செய்வது சின்ன புத்தியின் உத்தி;**

**பொய்மையை வலுப்படுத்தும்.**

## P.389 உலகில் தீமையுள்ளது மனிதனுக்கு நிதர்சனம். இதன் உண்மையென்ன?

- ❒ பெற்ற தாயார் சிறு குழந்தையை நையப் புடைக்கிறாள். அடிப்பதில் அவளுக்கு ஆசை எழுந்து கூத்தாடுகிறது, கும்மாளம் போடுகிறது.
- ❒ நல்ல பாம்பு அழகுமிகுந்தது. தூங்குபவன் தலை மீது படம் விரித்தால் அவன் அரசனாவான். அது கொடுமையான விஷத்தைக் கொண்டது.
- ❒ ஹிட்லர் 60 இலட்சம் யூதர்களை *பாக்டரி* வைத்துக் கொலை செய்தான்.
- ❒ நாட்டின் பிரிவினையின் பொழுது ஹிந்து கிராமங்கள் அனைத்து முஸ்லீம்களையும் கொன்றனர். முஸ்லீம் கிராமங்கள் அனைத்து ஹிந்துக்களையும் கொன்றனர்.
- ❒ பகவான் அவதரித்த வங்காளத்தில் 1943இல் 30 இலட்சம் மக்கள் பஞ்சத்தில் இறந்தனர். முக்கிய காரணம் உணவு பற்றாக்குறையில்லை என்று கூறுகின்றனர்.

பகவான் கூறும் விளக்கம் எளிமையானது, சிறுவர்க்கும் புரியும். தெளிவான விளக்கம் மனம் ஏற்பதில்லை. நடைமுறை விளக்கத்தை அர்த்தபுஷ்டியுடன் ஏற்பதில்லை. மனித சுபாவத்தின் சில அம்சங்களைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

1) தவறு எனத் தெரிந்தாலும், அதைச் செய்ய மனம் ஆர்வமாகத் துடிக்கிறது, செய்கிறது. எதிரான பலன் வந்தபொழுது, தவறு செய்தது நினைவுக்கு வருவதில்லை. ஏன் பலன் கெட்டுவிட்டது என மனம் புழுங்குகிறது.



2) நாம் பிறருக்குச் செய்வதை மூன்றாம் மனிதர் நமக்குச் செய்யும் பொழுது ஆத்திரம் பீறிட்டெழுகிறது.

3) 10 பேரை 9 பேராக எண்ணியவன் தவற்றைச் சுட்டிக் காட்டினால் புரிந்து மலர்ந்தவன், அடுத்த முறை தன்னை விட்டுவிட்டு எண்ணி, சோகக்கடலில் மூழ்குகிறான்.

4) அண்ணனை அழிக்கும் ஆர்வம் பேயாக எழுந்து பிசாசாக பிடித்து உலுக்கும் பொழுது அண்ணனை அழித்தவனை அடுத்த ஆண்டு பார்ட்னர் மோசடி செய்த பொழுது இரண்டு செயலுக்கும் உள்ள தொடர்பு மனதில் படுவதேயில்லை.

5) Mrs.பென்னட் £2000 வருமானம் முழுவதும் செலவு செய்துவிட்டு கடன் வாங்க முயல்வதைக் கணவர் தடுக்கிறார். பெண்கள் வளர்ந்தபின் சீதனமில்லை. எஸ்டேட் காலின்ஸ்க்குப் போகிறது என்றபொழுது அவருக்குத் தன் தவறு தெரியவில்லை. கணவனைக் குறை கூறுகிறார். **Mrs. பென்னட் மேல்மனம் நம் அனைவருடைய ஆழ்மனம்.**

**தெரியாதவருண்டு. அவர்கள் அந்தகாரத்தில் மூழ்கியவர்கள். தெரிந்தும் தவற்றை விரும்பிச் செய்பவனுக்குத் தவறு செய்யும் ஆர்வம் மேலிட்டிருக்கிறது. தவற்றின் மீது பாசமிருக்கிறது என பகவான் விளக்கம் தருகிறார்**.

மனம் பொல்லாததாக இருக்கிறவருண்டு. பிறர் அழிய ஆர்வமாகச் செயல்படுபவர் அவர் தான் முன்னுக்கு வருவதைவிட அவர்கட்குப் பிறர் அழிவது அவசியம். ஒரு சிலர் வட்டிக்கடை மார்வாரி - ஷைலக் போன்றவர் - பிறரை அழித்துத் தான் வெற்றி பெறுவதைக் கொள்கையாகப் பரம்பரையாகப் பின்பற்றுபவர்கள். அந்த அம்சம் ஓரளவாவது இல்லாத மனிதரிலர். அது தெரிந்தபின் அதைக் களைய முன் வராமல், அந்தத் தீய அம்சம் பலிக்க முயல்பவர் கையாளும் முறைகள்: சிக்கனம், கோள்

சொல்வது, உயிர் போகும்படி மானத்தை எடுப்பது, பிறர் அழியக் காத்திருந்து கை தட்டிச் சிரிப்பது, உன்னை அழிப்பேன், என்ன செய்வாய் எனச் சபதமிடுவது; ஊழல் மிகுந்தவனைக் கொடுமைக்காரனைத் தலைவனாக ஏற்பது, பிறர் வேதனையில் மனம் மகிழ்வது ஆகியவை.

***மனித சுபாவத்தில் அவசியமாகக் காணப்படும் அம்சங்கள் இவை.***

இவற்றைக் களைய முன்வந்து வெற்றி பெறுபவர் கண்ணில் உலகின் தீமை படுவதில்லை. அவர்கள் குறைவு. அவர்களைத் தீமை தீண்டியதேயில்லை.

***அவர்களைப் பொறுத்தவரை உலகில் தீமையில்லை.***

- ❖ தீமை, மனிதனின் கொடுமை, உள்ளத்தின் கடுமை புற உலகில் காண்பது. இறைவன் படைக்கவில்லை.
- ❖ பாவம் எவ்வளவு பெரியதானாலும், இந்த நோக்க ஆராய்ச்சி, தீமையில்லை என முடிக்கும்.

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பக்தன் வாழ்வில் தன் முன்னேற்றத்திற்காக இருக்கின்றான். சாதகனின் வாழ்வே யோகம். அவனுக்கு வாழ்வென்று ஒன்றில்லை. அன்னைக்காக, அன்னையுடன் யோகத்தில் ஒன்றியவன் சாதகன்.

***சாதகனின் வாழ்வே யோகம்.***



# அன்பர் கடிதம்

அன்புடையீர்! வணக்கம். எனக்கு கடந்த ஞாயிறு அன்று வயிற்றுவலி ஏற்பட்டது. அன்று எங்கள் ஊரில் எங்கள் குடும்ப டாக்டர் இல்லாததால், பக்கத்து ஊரிலுள்ள ஒரு மருத்துவரிடம் சென்றேன். அவர் scan எடுத்து பார்த்துவிட்டு அப்பெண்டிஸ் என்றும், இரவோ அல்லது மறுநாள் காலையிலோ வந்து operation செய்து கொள்ளுங்கள் என்றார். எங்கள் குடும்பத்துக்கு சற்றும் பழக்கமில்லாத மருத்துவர் என்பதாலும், சிறிய ஊர் என்பதாலும் எல்லோருக்கும் அவரிடம் operation செய்து கொள்ள தயக்கமாக இருந்தது. அதே சமயம் எங்களது உறவினர் ஒருவர், ஏற்கனவே அப்பெண்டிஸ்க்கு உடனடியாக operation செய்யாததால் இறந்து போயிருந்ததால், எனக்கு என்ன நேரிடுமோ என பயமாக இருந்தது. எங்கள் குடும்ப நண்பர் ஒருவர், தாங்க முடியாத அளவிற்கு வலி இல்லை என்பதால் மறுநாள் காலை எங்கள் குடும்ப டாக்டர் வந்த பிறகு அவரிடம் காண்பித்து பிறகு முடிவெடுக்கலாம் என்றார். கிட்டதட்ட 24 மணி நேரம் அன்னையின் பிரசாத பாக்கெட்டை வயிற்றில் வலி உள்ள இடத்தில் வைத்து, அன்னையை வேண்டிக் கொண்டே இருந்தேன். எங்கள் குடும்ப டாக்டர் வந்து பரிசோதித்து, ஆரம்ப கட்டம் என்பதால் மருந்திலேயே குணப்படுத்திவிடலாம் என்றார். அதன்படியே சிகிச்சை முடிந்து நேற்று நலமுடன் வீடு திரும்பினேன். எங்கள் எல்லோரின் பயத்தையும் போக்கி operation இல்லாமலேயே குணமாக்கிய அன்னைக்கு எனது நன்றியை காணிக்கையாக்குகிறேன். இத்துடன் ஒரு சிறிய தொகையை அன்னைக்கு சமர்ப்பிக்கிறேன்.

*-- G. கற்பகம், சீர்காழி*

❀ ❀ ❀

# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**II/11) துரோகத்துள் அன்னையைக் காண்பது தன்னுள் அன்னையைக் காண்பதாகும்.**

**எனவே மனிதனுடைய துரோகம் அன்னைக்கு விஸ்வாசமாக மாறக்கூடும்.**

- **அன்னையை துரோகத்தில் காண அகக்கண் விழிக்க வேண்டும்.**

☆ துரோகத்தை அறிய விஸ்வாசத்தை அதிகமாக அறிய வேண்டும்.

☆ விஸ்வாசத்திற்குள்ள எல்லா அம்சங்களும் துரோகத்திற்கு எதிராக இருக்கும்.

☆ அம்சம் எதிரானாலும், ஆன்மீகப் பலன் ஒன்றே.

ரிஷிகள் சபித்த துவார பாலகர்கள் - ஹிரண்யன், இராவணன் - சீக்கிரம் தன்னிடம் திரும்பி வர மகாவிஷ்ணு சொல்லிய உபாயம் அவரை நிராகரிப்பது.

☆ **மறுத்து பலனைச் சீக்கிரம் பெறலாம்.**

☆ துரோகிகள் அழிவதைக் காணலாம்.

☆ அடுத்த தலைமுறை அளவு கடந்து உயர்வதையும் காணலாம்.

☆ உயர்வதும் இரு வகையாக அமையும், உயர்வாக உயர்வதும் உண்டு, தாழ்வாக உயர்வதும் உண்டு.

☆ பெரிய குடும்பத்தில் பிறந்து துரோக மனப்பான்மையுள்ளவர் தற்கொலை செய்து அழிந்து அடுத்த தலைமுறை உழைப்பால் உயர்ந்து அழிந்தபொழுது அதில் ஒருவர் தாழ்ந்த செல்வருடன் சேர்ந்து பிரம்மாண்டமாக வளர்வதுண்டு. இலஞ்ச ஊழல், கடத்தல், சமூக விரோதிகளுடன் சம்பந்தம் செய்து உயர்வ-துண்டு.

☆ துரோகம் முன்னுக்கு வர விரும்பினால் துரோகம் செய்யும்.

☆ கல் வீசும் தேவதைகள் ஆண்டவனுக்குச் சேவை செய்ய வந்தால் கல் வீசும்.

☆ துரோகத்தில் அன்னையைக் காண்பது எங்ஙனம்?

☆ துரோகமும் முன்னுக்கு வர விரும்பும்.

☆ துரோகமும் அன்னையை நாடுகிறது.

☆ துரோகமும் சேவை செய்ய விரும்பும்.

☆ இவை அன்னைக்குரிய குண விசேஷங்கள்.

துரோகி நண்பனை அழிக்க முயல்வதில் அனைவரும் துரோகத்தைக் காணும்பொழுது, அன்பர் துரோகி அன்னையைச் சேவை மூலம் நாடுகிறான் என அறிவார்.

☆ அந்த ஞானம் வலுவானால் துரோகியால் அவருக்குத் துரோகம் செய்ய முடியாது.

☆ ஊனக்கண் காண்பது துரோகம்.

☆ ஞானக்கண் காண்பது ஆன்மவிழிப்பு.

☆ துரோகி தன் துரோகத்தை அழித்து அன்னையை அடைய தன் துரோகத்தைப் பிறரிடம் வெளிப்படுத்துவதை அகக்கண் காணும்.

☆ துரோகம் தீவிரமான எதிரான விஸ்வாசம்.

☆ விஸ்வாசம் செய்யும் சேவை காரியம் கூடிவருவது.

☆ துரோகம் செய்யும் சேவை காரியத்தைக் கெடுப்பது.

☆ காரியம் கெடுவதால் செய்யும் சேவை பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றுவது.

☆ விபத்தில் மாட்டப்போகும் இரயில் பிரயாணத்தைத் தடுப்பவர் உயிரைக் காப்பவர்.

☆ துரோகம் செய்யும் சேவை விஸ்வாசம் செய்யும் சேவையை விடப் பெரியது.

○ ○ ○

## II/12) பரிணாம வளர்ச்சி நிலையில் கருவியின் நிலையைப் பொருத்து கருவி திருவுருமாற்றமடையலாம், அல்லது கரையலாம் அல்லது நம்மை விட்டு அகலலாம்.

➛ **கரையவோ, விலகவோ, மாறவோ கருவியால் முடியும்.**

☆ **மனம் செய்யும் முடிவு (human choice) மகத்தானது.**

☆ மனம் போல மாங்கல்யம் என்பது மனம் ஆத்ம தெளிவுற்றுப் பணிவதால் பெரும் பலன் தருவது. முதல் சந்தர்ப்பத்தில் எனக்கு ஆசை வந்துவிட்டது என்பவன் அனைத்தையும் இழந்து உயிரையும் இழப்பான். அதிர்ஷ்டமிருந்தால் விலகிப் போவான்.

☆ தொண்டராக வாழ்க்கையை ஆரம்பித்த சாஸ்திரி பிரதமரானார்.

☆ பிரதமர் மகனாய்ப் பிறந்து பிரதமர் அதிகாரத்தை முழுவதும் செலுத்தியவர் ஆட்சியையும், அதிகாரத்தையும் இழந்து முடிவில் உயிரையும் இழந்தார்.

☆ ரூபாய் 100 நகையை அடமானம் வைத்துக் கடன் வாங்க முடியாதவர்களுக்குப் பாங்க் ஊருக்கு வந்து ரூபாய் 10,000 கடன் கொடுத்தபொழுது பணத்தை என் வீட்டிற்குக் கொண்டு தருவார்களா எனக் கேட்டார்கள். பாங்க் லோன் ரத்தாயிற்று.

☆ மானேஜருக்கு 5% இலாபம் தர ஒத்துக் கொண்ட முதலாளி பெரு இலாபம் சம்பாதித்த மானேஜருக்கு 10% கொடுக்க முன் வந்ததை மறுத்த மானேஜர் 2½ ஆண்டில் கம்பனி மானேஜிங் டைரக்டரானார். 25% இலாபம் தர முன் வந்த முதலாளியை பேக்டரியை எனக்கே கொடுத்துவிடுங்கள் எனக் கேட்ட மானேஜர் எதுவுமின்றிப் போய் 10 ஆண்டு சிரமம்



அனுபவித்தார்.

☆ கருவி செயலில் கர்த்தாவாக உள்ளது.

☆ கருவியென்றாலும் கலந்தும் செயல்பட முடியும்.

☆ உலகப் பிரசித்தி பெற்ற சர்ச்சில் கட்சியை வாக்காளர் தோற்க வைத்தபின், அவர் மனைவி இது உங்களுக்கு அவசியம் என்று வாழ்த்தினார்.

☆ கணவன் ஆளை அனுப்பி மனைவியைக் கொலை செய்யச் சொன்னதை அறிந்த மனைவி, என் கணவருக்கு அது விருப்பமானால் எனக்கும் அதுவே விருப்பம் என்றாள். நிலைமை மாறி விஷயம் அரசனையடைந்து, மனைவியின் பெருமையைக் கணவன் அறிந்து போற்றும் நிலை ஏற்பட்டது.

☆ ரோட்டில் நின்ற சிறுவன், கொடுமைப்படுத்திய மாமனுக்கு விஸ்வாசமானவன். பெரும் செல்வம் பெற்று மாமனை அழைத்து ஆதரித்து அத்தனை செல்வத்தையும் இழந்தான்.

☆ **கொடுமைக்கு நன்றி செலுத்தினால் கொடுமை வளரும் என பையன் அறியவில்லை.**

☆ தீட்டிய மரத்தில் கூர்பாய்ச்சுவது அன்றாடம் காண்பது. பெருவாரியானது.

☆ விஸ்வாசம் விலை மதிக்க முடியாத பரிசு பெற்றதை அரிபொருளாகக் காண்கிறோம்.

☆ திறமை விஸ்வாசத்தாலும், துரோகத்தாலும் உச்சியை அடைவதைக் காணலாம்.

☆ அடி மட்டத்தில் ஆரம்பித்து அடி மட்டத்தில் முடித்து எவர் ராஜாவானாலும் என் வேலைக்கு மாற்றமில்லை என்ற அனுபவம் பெற்றவர் பலர்.

☆ விலைமகள் கற்பு நெறி ஏற்று பெரும் புகழும் செல்வமும் பெற்றதை உலகம் கண்டுள்ளது.

☆ ராணி வழி தவறி, அரசனால் தெருவில் கல் மாரியால் கொல்லப்பட்டு, நாயாய்ப் பிறந்து கணவன் துறவியான பின்

அவனால் மோட்சம் பெற்று ராஜகுமாரியாய்ப் பிறந்து கணவனை -யடைந்து பூரணம் பெற்ற ஆத்மாவுண்டு.

- ☆ கருவி புண்ணியம் செய்தது.
- ☆ சத்தியஜீவியம் கருவியையும் திருவுருமாற்ற வல்லது.
- ☆ கருவியும் கருவும் ஒன்று என்பது தத்துவம்.
- ☆ வாழ்வு பூரணமானது. யோகம் பூரணத்தைப் பூர்த்தி செய்வது.

○ ○ ○

## II/13) துரோகத்தை விஸ்வாசமாகவும், விஸ்வாசத்தைத் துரோகமாகவும் காண்பது பூரண ஞானம்.

- **துரோகமே விஸ்வாசம், விஸ்வாசமே துரோகம்.**
- **துரோகத்தைத் துருவிப் பார்த்தால் விஸ்வாசம் தெரியும்.**
- **வலுவடையும் விஸ்வாசம் துரோகமாகத் தெரியும்.**

- ☆ காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பதில் மேற்சொன்ன ஞானம் பொதிந்துள்ளது.
- ☆ நாலு பேர் எதிரில், "நீ மடையன்" என மனைவி கூறிய பொழுது, 'நீ சிறப்பான பெண்மணி' எனக் கூறும் கணவன் இந்த ஞானத்தைத் தன் சூழ்நிலைக்குரியவாறு உணர்ந்தவன்.
- ☆ துரோகத்தை விரும்பி ஏற்றால் விஸ்வாசமாக மாறும்.
- ☆ **விஸ்வாசத்தைப் பாராட்டி புனிதமாக ஏற்றால் நல்லவரிடம் அது தெய்வீக வாய்ப்பை எழுப்பும். மற்ற அனைவரும் துரோகம் செய்ய முனைவார்கள்**.
- ☆ துரோகமும் விஸ்வாசமும் உறவு.
- ☆ நமக்குப் பொருள்கள் பயன்படுகின்றன.
- ☆ அவற்றோடு நமக்கு உறவில்லை.
- ☆ உறவு ஜீவனுள்ளதானால் அவர் நினைவு புரியும், உணர்வு தெரியும்.



- ☆ உறவு உள்ளது, நாம் அதை நம் அகந்தையால் பிரித்து விட்டோம்.
- ☆ நிலத்திற்கு எல்லை கட்டி பிரிக்கலாம்.
- ☆ ஒருவர் நிலத்தில் அடுத்தவர் வரமாட்டார்.
- ☆ ஆனால் அதனடியில் உள்ள பூமி பிரியாது, பிரிக்க முடியாது.
- ☆ கண்ணாடியில் முகம் இடம் வலமாக மாறித் தெரிகிறது.
- ☆ உள்ள உறவு பிரிந்தபின், எதுவும் அடுத்தவரில் தலைகீழாக மாறித் தெரியும்.
- ☆ அதுபோல் விஸ்வாசம் துரோகமாகத் தெரியும்.
- ☆ மனைவிக்குக் கணவன் மீதுள்ள பாசம் அளவுகடந்து எல்லை மீறிப் போனால், கணவனுக்கு அவள் மீது வெறுப்பு எழும். இது மனித சுபாவத்தின் சட்டம்.
- ☆ பிரிட்டன் தன் காலனிகளில் மிகவும் உயர்ந்த மனப்பான்மை-யுடன் நடந்தது.
- ☆ கிருஸ்த்துவ மதத்தைப் புகுத்தவில்லை.
- ☆ உள்நாட்டுக் கலாச்சாரத்தில் தலையிடவில்லை.
- ☆ வியாபாரத்துடன் உறவை நிறுத்திக் கொண்டனர்.
- ☆ ஆஸ்த்திரேலியா, கனடா, அமெரிக்கா, இந்தியா, சிலோன், சிங்கப்பூர், ஹாங்காங் போன்ற எல்லா இடங்களிலும் இதுவே அவர் முறை.
- ☆ அயர்லாந்தில் நேர் எதிராக நடந்தனர்.
- ☆ மதத்தில் தலையிட்டனர்.
- ☆ நிலத்தில் தலையிட்டனர்.
- ☆ ஸ்காட்லாந்து கிருஸ்த்துவர்களை அயர்லாந்தில் குடியேற்றினர்.
- ☆ எந்தச் சுதந்தரமும் தர மறுத்தனர்.
- ☆ பஞ்சம் வந்தபொழுது லட்சக்கணக்கானவரை சாக அனுமதித்-தனர். உதவி செய்யவில்லை.

- ☆ அயர்லாந்தை விட்டு 4 கோடி மக்கள் வெளியேறினர். 40 லட்சம் தங்கினர்.
- ☆ கடந்த 20 ஆண்டுகளில் EUவில் கடைசியில் நின்ற அயர்லாந்து முதல் நிலைக்கு வந்தது.
- ☆ பிரிட்டன் அன்று செய்த துரோகம் இன்று விஸ்வாசமாக மாறியது.
- ☆ **அன்றே அது விஸ்வாசம் எனப் புரியவில்லை.**
- ☆ இன்று காஷ்மீர், இஸ்ரேல், ஸ்ரீ லங்கா பிரச்சினைகளை அப்படி நாம் கருதினால் அவை தானே சரியாகும்.
- ☆ குந்தி கர்ணனுக்குச் செய்தது துரோகமில்லை, விஸ்வாசம் என்ற தெளிவு நமக்கு இன்று ஏற்படுமா?

*தொடரும்....*

❀ ❀ ❀

**ஜீவிய மணி**

**உணர்வின் தூய்மை உடலின் சுத்தம்.**

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சரணாகதியின் பேரில் மனிதன் தெரிந்த பாவத்தை விட்டு தெரியாத பாவத்திடம் புகலிடம் தேடுகிறான்.

***பாவத்தைச் செய்ய பரமனை நாடாதே.***

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

# கதவு

அடைமழை. இரட்டைக் கதவு மழையில் நனைந்து ஊறி உப்பிவிட்டது. மூட முடியவில்லை. சுமார் மூன்று அங்குலம் முன் பொருந்துகிறது. மூட வழியில்லை. அழுத்தி மூடியபொழுது கதவு மூடிக் கொண்டது. படீரென பெரும் சப்தம் எழுந்தது. ஒவ்வொரு முறையும் இப்படிச் செய்ய முடியுமா? மழை நாள் சில மாதமிருப்பதால், கதவில் அரை அங்குலம் குறைத்துவிடலாமா என்பது கேள்வி.

அன்பர் கேள்வி வேறு; முடியாது என்பதைச் சமர்ப்பணம் சாதிக்குமா? சமர்ப்பணம் அப்படிச் சாதித்தால் அது அன்பர் அகந்தைக்கு விருதாகுமா? அம்முனைப்பிருந்தால், அதைச் செய்யாமலிருப்பது மேல். சமர்ப்பணம் இவ்வளவு சிரமமான காரியத்தைச் சாதிப்பதைக் காணாத அன்பர் ஒரு முறை சோதனை செய்யலாம் என்பது சட்டம். கதவைச் சப்தமாக மூடியது அன்பர். அதிக நம்பிக்கையுடையவர். எந்தக் காரியத்தையும் சமர்ப்பணம் சாதிப்பதைப் போல் மாற்று வழிகள் உண்டு. அறிவுக்குரிய வழி, திறமை skillக்குரியது, பொறுமைக்குரியது எனப் பல வழிகளுண்டு. கதவைத் திறந்து மீண்டும் மற்றொருவர் மூட முயன்றார். அவர் பொறுமைசாலி. பக்குவமாக முயன்றார். சப்தமின்றி மூட முடிந்தது ஆச்சரியமாயிற்று. வேறொருவர் முயன்றார். முடியாது என விட்டுவிட்டார். மீண்டும் சமர்ப்பணத்தால் முயன்றார். விரைவாக கதவு சப்தமின்றி மூடியது. முதலில் மூடியவருக்குச் சமர்ப்பணம் தவறியதில்லை. அவர் மீண்டும் முயன்றதால் சமர்ப்பணம் பலித்தது.

- **அன்று முதல் மழை முடியும் வரை ஒவ்வொரு நாளும் கதவு சமர்ப்பணத்தால் சப்தமின்றி மூடிக்கொண்டது.**
- சமர்ப்பணம் தவறாது; நம் நம்பிக்கை தவறும்.

***எந்தக் குறையும் எவரிடமுமில்லை.***

❀❀❀

# சைக்கிள்

உடற்பயிற்சிக்காக சைக்கிள் விட டாக்டர் சொன்னார். ஓரிடமாக உள்ள சைக்கிள் கால், கைகளை ஆட்டிப் பயிற்றுவிக்கும். பல நாள் உபயோகப்படுத்தாததால் கீரீச்சென சப்தம் வருகிறது. எண்ணெய் போட்ட பின் சப்தம் குறையவில்லை. இரண்டு அல்லது மூன்று முறை எண்ணெய் போட்ட பின்னும் சப்தம் வருவதால் மீண்டும் அதைக் கேட்பது பயன் தராது என அன்பர் நிறுத்தி விட்டார். அரை மணி நேரமும் ஓயாது எழும் சப்தம் எரிச்சல் தரும். எரிச்சலை சமர்ப்பணம் செய்தால், சப்தம் அதிகமாக வருகிறது. எரிச்சல் வளருகிறது. எரிச்சலை சமர்ப்பணம் செய்யும் பக்குவமற்றவர் என அன்பர் சமர்ப்பணத்தைக் கைவிட்டு விட்டார்.

மூன்று மாதம் சைக்கிள் விடுவதை நிறுத்திவிட்டார். மீண்டும் ஆரம்பிக்க மனமில்லை. மூன்று மாதமானபின் சப்தம் அதிகமாக வரும். மேலும் பத்து நாள் கழித்து சைக்கிள் விட ஆரம்பித்தார். சப்தம் துளிகூட வரவில்லை. தொடர்ந்து ஒரு மாதமும் சைக்கிள் விட்டபொழுது சப்தம் வரவேயில்லை; பல மாதமும் சப்தமில்லை.

இடைவெளியில் நடந்தது சைக்கிளைத் தினமும் நன்றாகத் துடைத்தார்கள். எவரும் எண்ணெய் போடவில்லை. சப்தம் எப்படி நின்றது என்பது ஒரு கேள்வி. டாக்டர் கூறியதை மீறி சைக்கிளை நிறுத்திவிட்டதால் அன்பருக்கு நாள் முழுவதும் சைக்கிள் நினைவு வரும். சைக்கிளுக்காக நினைவு வருவதில்லை. சைக்கிள் விடும் பொழுது அன்பர் சைக்கிளை ஒரு முறையும் நினைப்பதில்லை.

பயன்படுத்தாத பொழுது சுத்தமாக இருப்பது அவசியம் எனத் துடைத்ததாலும், இடைவிடாது அன்பர் மனதில் சைக்கிள் இருந்ததாலும்,

- சைக்கிள் தானே சப்தம் போடுவதை நிறுத்த முடிவு செய்தது.

***நாம் காணும் குறையனைத்தும் நம்முடையதே.***

❀❀❀

**January 2011** Jiviyam 16 Malar 9
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11

## புதிய வெளியீடுகள்

**ESSAYS ON ACCOMPLISHMENT** ரூ.150/-
N.Asokan

கர்மயோகியின்

**அன்னையின் ஆன்மீகப்பரிசு** ரூ.100/-

**லைப் டிவைன் - கருத்துகள்** ரூ.100/-

**பரம்பொருள் III** ரூ.200/-

**எங்கள் குடும்பம் (பாகம் 2)** ரூ.250/-

**உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** ரூ.100/-

**யோக வாழ்க்கை விளக்கம் IV** ரூ.150/-

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

**லைப் டிவைன் விரிவுரைகள்** ரூ.100/-
*தமிழாக்கம்:* என். அசோகன்

**SATYA JYOTHI** ரூ.200/-
(CONCISE TRUISMS)
N.Asokan

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191